# திராவிடநாடு

K. Balakrishnan.
18/11/46.



*80 Years Fame & Name*

# Guru Medicines

FOR CHILDREN

**DR. A. MATHURAM SONS.,**

TRICHINOPOLY.

---

ஒரு வேண்டுகோள் !

## குரு மருந்துகள்

**விற்பனையாளர்கள்**
**—உபயோகிப்பவர்களுக்கு**

◇

உங்கள் தேவைக்கான உற்பத்தியைப் பெருக்குவதில், தாங்கள் விசேஷ முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

இன்னும் சில மாதங்களில் பர்மா, மலேயா, ஜாவா, சுமத்திரா, தென்னாப்பிரிக்கா, சிலோன் போன்ற வெளிநாடுகளில் உள்ளவர்களும் தங்கள் தேவைக்குத் தாராளமாய் குரு மருந்துகளைப் பெறலாம்.

ஆகையால் அவசியமாய் தேவைப்படும் அளவுக்குமட்டும் பெற்று ஆதரவளியுங்கள்.

★

**டாக்டர் எ. மதுரம் சன்ஸ்.,**

குரு மருந்து சாலை, : : திருச்சிறாப்பள்ளி.

---

**GURU THYLAM & TOOTH POWDER**

K. Balakrishnan

# வெற்றி!



(1) இரண்டாம்நிக்கோலாஸ், ரஷிய ஜார், கொடுமையின் சின்னம்.

(2) அவனை ஆட்டி வைத்தான் மதகுரு ரஸ்புடீன்.

(3) கோடீஸ்வரன், முதலாளி, ரியாபுஷின்ஸ்க்கிமன்னனும் மதகுருவும் சேர்ந்து செய்தகொடுமைக்குத் துணைபுரிந்தான்.

(4) மக்கள், மாடென உழைத்தனர். பட்டாளத்தார் பண்ணைகளில் அட்டகாசம் செய்தனர்.

(5) ஏன்? என்று கேட்டால், சிறை தான்!

(6) அடக்குமுறைக்குப்பலியாகிப் பிணமான ஏழைகளை ஏற்றிச்செல்ல 'மரண வண்டி' தயாராக இருந்தது.

(7) ஏழ்மையும் கொடுமையும் தாங்காமல் வேலை நிறுத்தம் செய்தனர் பாட்டாளிகள்.

(8) ஜாரின் கூலிப் படைகள், பாட்டாளிகளைச்சுட்டுத்தள்ளின.

(9) பாட்டாளியுடன் விவசாயியும்சேர்ந்து கொடுமையைக் கண்டு பதைத்தான்.

(10) புரட்சி மூண்டது, மக்களின் பலம் மகத்தானதாகி விட்டது.

(11) சிறைப்பட்டான் ஜார்! தூக்கிவிடுக என்றனர் மக்கள்! காவலில் கிடந்தான் கொடியோன்.

(12) வெற்றி! [illegible] ஆட்சி! பொதுவுடைமை [illegible]



# M. V. D. Swami

**THE HOUSE FOR TEXTILES**

251, DEVARAJA MUDALI STREET

**Park Town, :: :: MADRAS.**

Dealers in Silk, Woollen & Cotton Piece Goods

**LACED SILK & COTTON SAREES ARE OUR SPECIALITY**



நாணயம் | **எஸ். ஏ. செல்லம் அண்டு சன்ஸ்** | நம்பிக்கை

**33, தேவராஜ முதலி தெரு, சென்னை.**

★ சில்க்ஸ்

★ ஜம்பர்ஸ்

★ மில் ஜவுளி

SELLAMs
For
Stylish, Sarees

★ புதுபார்டர் சேலைகள்

★ கைத்தறி திணுசுகள்

★ சரிகை, பட்டு ரகங்கள்

**அன்பர்கள் வருக!**

[illegible] திருப்தி | **அனைவரும் விரும்பும் ஆடைகள்** | எமது நோக்கம்

# இன்பம் காண!

★

புதுவுலகம் போற்றி எதிர் கொண்டழைக்கும்
புனிதமிகு சமதர்ம ஆட்சியாலே,
கதியற்றோர் நிதியற்றோர் வறுமையுற்றோர்
காலமெலாம் உழைத்துழைத்து வலிமையற்றோர்,
சதி செய்யும் சாத்திரத்தால் மதத்தால் மற்றும்
சாதி யெனுங்கொடுமையினால் நசுக்கப்பட்டோர்,
அதிவிரைவில் துயர்நீங்கி இன்பம் காண்பர்!
ஆதலினால் சமதர்மம் தோற்றுவீரே!

ஒரு சிலரே நாட்டினது செல்வந் தன்னை
உறிஞ்சி மிகக் கொழுக்கின்ற நிலைமை மாறப்,
பெருமக்கள் உழைப்பின்றி உணவுமின்றிப்
பெருந்துயரில் வருந்துகின்ற கொடுமையேகச்,
சரி சமமாய் மக்களெல்லாம் விளங்கி நாளும்
தன்மான வாழ்வினிலே இன்பங்காண
அறநெறியாய் விளங்குகின்ற சமதர்மத்தின்
ஆட்சியை இந்நாட்டினிலே தோற்றுவீரே!

★

## புண்ணிய நாடு

புண்ணிய நாடென்று சொலும் இந்த நாட்டில்
புழுப்போல துடிக்கின்றார் ஏழைமக்கள்!
கண்கொண்டு பார்ப்பதற்கோ சகிக்கவில்லை!
கதியற்றே நிதியற்றே வறுமையுற்றே
புண்மனத்தால் வாடுகின்றார்! அந்தோ, இந்தப்
புவிதனிலே வேறெங்கு மிதுபோற் காணேன்!
எண்ணமெலாம் 'என்செய்வோம்?' என்பதாகும்;
இடிகின்றார் மனத்துயரால் நலிகின்றாரே!

# ★ தோழமை ★

"சோர்வு, உள்ளே சென்றபோது! வெளியேவரும்போது, புத்துணர்ச்சி, களிப்பு, நம்பிக்கை. நான் 1945-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சோவியத் ரஷியாவுக்குச் சென்றேன். எவ்வளவோ இலட்சக்கணக்கான மக்களுக்கு இருந்தது போலவே எனக்கும் அந்த நாட்களில், களைப்பு, சலிப்பு, எதிலும் பற்று இல்லாதநிலைமை. இப்படிப்பட்ட நான், சோவியத்சென்றேன்—அங்கு கண்ட சோபிதம் எனக்கு இருந்தசோர்வைநீக்கிக் களிப்பூட்டிற்று." என்று, உற்சாகத்துடன் உரைக்கிறார், உள்ளப்பண்பையும் உலகின் நிலையையும் நன்கு அறிந்தவரான J. P. பிரீஸ்ட்லீ எனும் பேரறிவாளர்.

என்ன கண்டீர்கள் சோவியத் நாட்டிலேஎன்ற கேள்விக்கு, எவ்வளவோ பதில் கூறலாம், வர்ணனைகள் தரலாம், புள்ளிவிவரங்களைக் கொட்டலாம், சித்திரங்களைக் காட்டலாம்; ஆனால் பிரீஸ்ட்லீ, ஒரேவார்த்தைமூலம் அழகாக, சோவியத்தை எடுத்துக்காட்டினார், கேட்டவரின் அகக்கண்களுக்கு நன்கு விளங்கும்படி. "என்னகண்டேன் என்றுகேட்கிறீர்கள்? தோழமையைக் கண்டேன்" என்று அவர் கூறினார். அந்த ஒருவார்த்தையில் பொதிந்துள்ள பொருள் ஏராளம். தோழமை! ஆழ்ந்த கருத்துள்ள அழகிய சொல்.

ஒற்றுமை — கூட்டுறவு — ஒப்பந்தம்—கூடிவாழ்தல்—நட்பு—அன்பு—என்றுள்ள எத்தனையோ பதங்களும், ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக்கூடியவை—முழுத் திருப்தி தருபவை அல்ல—தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை—ஆனால் தோழமை, இவ்வளவுக்கும் மேலான ஓர்நிலை—பேதம் நீங்கிய, நீக்கப்பட்ட, அல்லது கவனிக்கப்படாத நிலை அல்ல—பேதம் ஏற்படாதநிலை—ஏற்பட முடியாதநிலை—தோழமை. அதனைச்சோவியத்திலே கண்டேன் என்று அறிஞர் பிரீஸ்ட்லீ கூறுகிறார். சர்ச்சில் போன்ற ஏகாதிபத்ய வெறியர்களின் கண்களுக்குச் சோவியத்பிரங்கி, சப்மெரைன், இவைகள்மட்டுமே தான் தென்படும்—மக்களின் கண்கொண்டு அந்த மகத்தான நாட்டைக் காணும் மதிவாணர்கள்காண்பதுவேறு — அறிஞர் கூறினது போல, அங்கே, தோழமை நிலவுவதைக்காண்பர். அந்த நிலையை இன்னமும் வேறு எந்த நாடும் அடையவில்லை—அடைய முயற்சிக்கவில்லை—அந்த நோக்கம் கூட இல்லை.

"நண்பர்களே!" என்ற வார்த்தையை நாவாறக்கூறும் நாடுகள் பல; ஆனால் தோழர்களாக வாழ்கிறோம் என்று உளமாறக்கூறும் நாடு, சோவியத் ஒன்றுதான்.

நாங்கள் ஒரு தாய்நாட்டவர்—பற்று; அவ்வளவுதான்.

ஒரு மதக்காரர்—பாசம்; அதற்குமேல் இல்லை. ஒரே கட்சிக்காரர்— நேசம்; அவ்வளவோடு நின்றுவிடும்; ஏனெனில் இவை ஒவ்வொன்றும், கடைசிவரை நீடிக்கக் கூடியது மல்ல, மனதுக்கு முழுத்திருப்தி தரக்கூடியதுமல்ல.

"பேராசைக்காரன்! கபடன்! ஏழையைக் கசக்கிப்பிழிகிறான்" என்று ஒரு பிரிட்டிஷான், மற்றோர் பிரிட்டிஷானைப் பற்றிப் பேசக்கேட்கலாம்—தொழிலாளி முதலாளித்தகராறு இருக்கும் போது—அப்போது, ஒருநாட்டு மக்கள்என்ற உணர்ச்சியை, முதலாளித்துவம் தரும் வேதனை, விரட்டி விடுகிறது; தாய்நாடு என்ற பேச்சு போய்விடுகிறது; ஒரு நாட்டுக்காரர் என்றபற்று மறைகிறது—நாடு—எல்லை—இல்லை; இருப்பது ஒரே, ஒரு எண்ணம், நான் ஏழை; என்னை அவன் வஞ்சிக்கிறான் என்பது தான். "அவனும்உன் நாட்டவன் தானே! சொந்த நாட்டுக்காரர்கட்குள் சண்டையா? ஆகுமா இந்தச் சகோதரச் சண்டை" என்று கேட்டுப் பார்த்தால் தெரியும்,நாட்டுப்பற்றை அவன் நையாண்டி செய்வான்.

இதோபார் என்நாடு! என்று காட்டுவான் தன் இடிந்த வீட்டை. அதோபார் அவனுடைய நாட்டை என்று காட்டு

5-ம் பக்கம் பார்க்க

## தோழமை

4-ம் பக்கத் தொடர்ச்சி

வான் மாளிகையை. காட்டிவிட்டுக் கூறு வான், இருவரும் ஒரே நிலப்பரப்பிலே இருக்கிறோம்; அவ்வளவேதவிற அவனும் நானும் ஒரு நாட்டுக்காரரல்ல; அவனுடைய நாடு, உல்லாசபுரி; என் நாடு, உழைத்து அலுக்குமிடம்'' என்று கூறுவான், கோபம் கொண்ட ஏழைத்தொழிலாளி.

நெருக்கடியான எவ்வளவோ நேரங்களிலே, நாட்டுப்பற்று, மதப்பற்று, முதலியன மங்கிவிடும்; விரோத உணர்ச்சியே கூட மூண்டுவிடும்;

தோழமை அஃதல்ல. ஒருவரை ஒருவர் கண்டவுடன், முகமலர்ச்சி—சிரமமின்றி ஏற்படவேண்டும்—பயன் கருதி அல்ல—பாசாங்குக்கு அல்ல—அர்த்தமற்றுமல்ல—கண்டதும் களிப்பு—நம்மைப்போல் ஒருவன் என்ற நினைப்பிலிருந்து அந்தக்களிப்பு மலரவேண்டும். அது, சுறண்டும் முறை ஒழிந்த சோவியத்தில் தவிர வேறிடத்தில் காணமுடியாது.

வேறு இடங்களிலே, பேதங்கள்மறைக்கப்பட்டு இருக்கும்—ஆனால் ஒழிக்கப்பட்டு இராது—ஒழிக்கப்பட்டாலும் கூட, மீண்டும் பேதம் ஏற்படாத நிலைமை ஏற்பட்டிராது.

பேதம், வெறும், மனஉணர்ச்சியினால் மட்டுமே ஏற்படுவதல்ல—மனப்பிராந்தியுமல்ல—வீணுக்கல்ல, பேதம் தரும் முறையை இன்றும் பலர் விடாப்பிடியாகக் கொண்டிருப்பது. பித்தர் செயலல்ல; பலப்பல தலைமுறைகளாக இருந்து வரும், தந்திரம் அது.

பேதம், இலாபம் தருகிறது; எனவேதான் அதனை விட்டுவிட மனமில்லை, பேதத்தால் பிழைப்பவர்களுக்கு. ஓநாய்க்கு இரத்தபானத்தில் சுவை இருக்குமட்டும், ஜீவகாருண்யத்தை அது எப்படி வரவேற்கமுடியும்! பேதமும், பலகாலமாக. இலாபம் தரும் சாதனமாக இருப்பதாலேயே, அதற்குச் 'சாகாவரம்' கோருகின்றனர், அதனால் இலாபம் பெறுபவர்கள்.

சோவியத்திலே, பேதத்தால் வரும் இலாபம் ஒழிக்கப்பட்டு விட்டது. எனவேதான் அங்கு தோழமை இருக்க முடிகிறது.

மகாஜனங்களே! என் தாய் நாட்டவரே! நண்பர்களே! சகோதரர்களே! இருந்தவர்களே!—இவை அல்ல, அங்கு பொருளுள்ள வார்த்தைகள்—தோழர்களே! இதற்குத்தான் அங்கே பொருள் இருக்கிறது—தோழர்களாக அங்குதான் மக்கள் வாழ முடிகிறது.

அமெரிக்காவில் ஸ்மித் எனும்சாதாரணத்தொழிலாளியும், மார்கன் எனும் முதலாளியும், ''அமெரிக்கர்களாக' மட்டுமே இருக்கமுடியும், தோழர்களாக முடியாது.

பிரிட்டனில் உள்ள ஆலைத்தொழிலாளி ஆர்தரும் ஆலைமுதலாளி ஆர்வியும் தோழர்களாக முடியாது, ''பிரிட்டிஷார்'' என்று மட்டுமே இருக்கமுடியும்.

ரஷியாவில் மட்டுந்தான் ''தோழமை'' இருக்கமுடியும். இந்தத் தோழமையைக் காணவேண்டி, வேதாந்திகள், அரசியல் வித்தகர்கள், கவிவாணர்கள், என்போரெல்லாம் ''தவம்'' கிடந்தனர்—தத்துவவாதிகள், இந்தத் தோழமை எப்படி எப்படி இருக்கும் என்பதை விளக்கி ''வண்டி வண்டியாக'' எழுதி வைத்தனர்; ஆலயமூலம், அரண்மனை வாயிலாக, மாளிகை மூலம், மார்க்கட்டு வாயிலாக, பார்லிமெண்டுமூலம்—எங்கெங்கிருந்தோ, இந்தத் தோழமையைப் பெறமுயற்சிகள் செய்யப்பட்டன.

என்ன பிரமாதமிருக்கிறது சோவியத்திலே? என்று கேட்பவர்களுக்கு, ஒரே ஒரு பதில் தான் கூறமுடியும்—அறிஞர் பிரீஸ்ட்லி கூறியதுபோல, சோவியத்தில் தோழமை இருக்கிறது.

''தெற்குக் காகேசியப்பகுதி, முதல் தருக்கி எல்லைவரை, லெனின் கிராட் முதலியபல்வேறு இடங்கள் சென்றேன்

6-ம் பக்கம் பார்க்க

## தோழமை

5-ம் பக்கத் தொடர்ச்சி

—பல ஆயிரம் மைல் பிரயாணம் செய்துபார்த்தேன்; காய்கறித்தோட்டத்திலிருந்து கனிகள் (சுரங்கம்) வரைசென்றேன்; பல்கலைக்கழகங்களுக்கும் விஞ்ஞானிகளின் கழகங்களுக்கும் சென்றேன், நடிகர், எழுத்தாளர், நிபுணர்கள், தொழிற்சாலை நிர்வாகிகள், ஆசிரியர்கள், சர்க்கார் அலுவலகத்தவர், மாணவர், உழவர், எதுவும் பாக்கிவிடவில்லை—சகல இடமும் சென்றேன்—சகலரையும் சந்தித்தேன்—எங்கு நான் சென்றாலும், புழுதிபடிந்திடும் ஆர்மீனியப்பகுதியாக இருக்கட்டும், ஆப்பிள் பழச்செடிநிரம்பிய யுக்ரைன்பகுதியாக இருக்கட்டும் எங்கும் நான் ஒரு அற்புதத்தைக் கண்டேன், தோழமையைக் கண்டேன். ரயிலில் போகும் போதும் சரி, விடுதிகளில் தங்கும்போதும் சரி அந்தமக்கள், விடமாட்டேனென்கிறார்கள்—தோழமையால் நம்மைப் பிணைத்துவிடுகிறார்கள். சோவியத்துக்குப் போகிறவர்கள், இன்னின்னவற்றைப் பார்க்கவேண்டும் என்று முன்னதாகவே, பிரச்சார நோக்கத்துடன், அந்த நாட்டு சர்க்கார் ஏற்படுத்திவிடுகின்றனர்," எனவே தான் அங்கு போய் வருகிறவர்கள், இன்பபுரி கண்டதாகப் பேசுகின்றனர் என்று குற்றம் கூறுபவர்கள்உண்டு. சோவியத் சர்க்கார், என்னென்ன முன்னேற்பாடுகள், காட்சிகள்கூட, அமைக்கட்டும்—அமைக்கக்கூட முடியும்—ஆனால் நான்கண்ட இலட்சக்கணக்கான மக்களின் கண்களிலே கூத்தாடிய களிப்பு, முகத்திலே தவழ்ந்ததிருப்தி, நடவடிக்கையிலே காணப்பட்ட நற்பண்பு அந்தத் தோழமை உணர்ச்சி, இதைக் கூடவா, ஒரு சர்க்கார் முன் கூட்டிஏற்பாடு செய்திருக்க முடியும்! களிப்பைப் பிடித்து, சோவியத் மக்களின் கண்களிலேவைத்தக்கூடவா காட்டுகிறார்கள்!! என்று கேட்கிறார் அறிஞர் பிரீஸ்ட்லீ.

**வாழியஎன்நன்னாடு**
**பொன்னாடாக!**

## ஸ்டாலின் குடும்பம்

ஸ்டாலின் என்ற பெயர் கேட்டதும், சமதர்மம், என்ற விஷயமே மக்கள் கவனத்துக்குவருகிறது. இங்கு, அவரதுகுடும்பத்தைப்பற்றிச்சிறிது கூறுகிறோம். ஸ்டாலினுக்கு முதல் மனைவி மூலம் ஒரு மகன் பிறந்தான். மன்னரின் மகன் மன்னனாவது போல், இங்குஇல்லை. ஸ்டாலின்மகன்ரஷிய அரசியலிலே கூட பங்கு கொண்டில்லை தொழிற்சாலையொன்றிலே வேலைசெய்கிறான். அலிஜாஷ: என்னும் அந்த இளைஞன், ஸ்டாலின் ரஷிய நாட்டு அரசை நடத்தும் பேறு பெற்றும், சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொள்ளாமல், ஸ்டாலினிடம் அடிபட்டு, திட்டு கேட்டு திண்டாடித் தவித்து இப்போது வெறுந்தொழிலாளியாகஇருக்கிறான். சோவியத்நாட்டிலேபரம்பரைபாத்யம் கொண்டாட முடியுமா! ராஜாமகன் சின்னராஜா ஆகலாம். டாக்டரின் மகன் கம்பவுண்டர் ஆகவேண்டுமானாலும், அதற்காகப் படித்தால் தானே முடியும். அதுபோல், ஸ்டாலின்மகனானாலும், சோவியத் நாட்டிலே, மற்றோர் ஸ்டாலினாக விளங்க வேண்டுமானால், "நான் ஸ்டாலின் குமாரன்" என்றுசொன்னால் போதாது. திறமை இருக்கவேண்டும். அது இல்லை அலிஜாஷாவிடம்! உலகக்கீர்த்திபெற்றவருக்கு உதவாக்கரைப் பிள்ளை பிறந்தது.

* * *

இரண்டாம் மனைவிக்கு ஒருமகன் பிறந்தார். இவர்பெயர்வாசில். இவனும் அவன்தம்பியானான்! உப்புசப்பில்லாதவாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கிறான். பிரிட்டனிலே, முதலமைச்சராக இருக்கும் சர்ச்சில், குடும்பமே கீர்த்தியோடு வாழ்ந்திருக்கிறது. சர்ச்சிலின் தகப்பனார் பிரிட்டிஷ் அரசியலிலே பிரக்யாதியோடு விளங்கினார். அதுபோலவே காலஞ்சென்ற சேம்பர்லெயினின்குடும்பமும்பிரக்யாதியுடையது.

* * *

ஒருமகள் ஸ்டாலினுக்கு. பெயர்ஸ்வெட்லானா என்பதாம். இந்தப் பெண்சற்று கீர்த்தியுடன் வாழ்கிறார். பனிரெண்டாவது வயதிலேயே, போதகாசிரியை ஆகிவிட்டார். நல்ல சங்கீதப் பயிற்சி உண்டு. ஸ்டாலினுடைய கீர்த்தியில் ஓரளவாவது இந்தமகளே, பெறமுடிந்தது.,

# நான் மனிதனானேன்!

[நவம்பர் புரட்சி வெற்றி பெற்றதற்கான முக்கிய காரணங்களிலே ஒன்று, ஏழைபடும் பாடுபற்றி ஏற்கனவே பலர் உணர்ந்துவரும்நிலைமை ஏற்பட்டு — தக்கதோர் சூழ்நிலை இருந்ததுதான். சீமான்களில்பலரும், அரச குடும்பத்தினர் சிலருங்கூட இந்தச்சூழ்நிலைகாரணமாக மனம் மாறினர். ஏழையின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று ஆசைகொண்டனர்—ஆனால் பிரபுக்களின் பட்டுத்துணியால், கண்ணீரைத்துடைக்க முடியவில்லை!

இப்படி மனம்மாறியசீமான்கள், ஜார் சர்க்காரின் சீற்றத்துக்கு ஆளாகித் தண்டிக்கப்பட்டனர்—நாடு கடத்தப்பட்டனர்—சிலர் வெளிநாடு சென்றுவிட்டனர்.

அப்படி, தண்டிக்கப்பட்டுப் பிறகு சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு, சீமைவந்துசேர்ந்த ஒரு ரஷிய சீமான், தன் கதையைக்கூறினார், சீமையில் சிலநண்பர்களிடம். அதன் சாரம் இது.]

நண்பர்களே! நீங்கள் நன்றாக அறிவீர்கள், நான் ரஷியாவிலே பிரபு வம்சத்தில் பிறந்த ஒருசீமான் என்பதை. அப்படிப்பட்ட நான், எப்படிப்புரட்சி இயக்கத்திலே சேரநேர்ந்தது என்று உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கும். என் மனம் மாறிய விதத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்.

சீமான் குடும்பத்திலே பிறந்து செல்லப் பிள்ளையாகவேதான் வளர்க்கப்பட்டேன். என் தகப்பனாருக்கு, அரசாங்கத்திலே பெரியசெல்வாக்கு, எங்கள் பண்ணை பெரிது—ஆள் அம்புஏராளம், வாழ்க்கையே திருநாள்!

சிறுவனாக இருக்கும்போது நான் பக்தி செலுத்தித்தான் வந்தேன் — அதாவது— வழக்கப்படி மாதாகோவில் செல்வேன். எங்கள் குடும்பம் வைதீகமார்க்கத்தில் ஈடுபட்டிருந்தது.

பனிரண்டாம் வயதிலேதான் எனக்கு மதத்தினிடம் இருந்த நம்பிக்கை தேய ஆரம்பித்தது. என் மாளிகையில் வரும் மதகுருமார்களை, என் தகப்பனார் எவ்வளவு அலட்சியமாக நடத்தினார், அவர்கள் எவ்வளவு அடங்கி ஒடுங்கி நடந்துகொண்டார்கள் என்பதைப்பார்த்தேன். குருமார்களைக்கேவலமாகப் பேசும் பக்தன், பிரபுவாக இருக்கிற காரணத்துக்காக, அந்தக் குருமார்கள் வாய்மூடிகளாக இருந்தபோது எனக்கு எப்படி அந்தக்குருமார்களின் போதனைகளிலே பற்றும் அவர்களின் ஆதீனத்திலே இருக்கும் தொழுகை ஸ்தலத்திடம் மதிப்பும், இவ்வித அமைப்புகொண்ட மதத்திடம்நம்பிக்கையும் இருக்க முடியும்? பிரபுவுக்கு, எவ்வளவோ வகையான ஏவலர் இருப்பதுபோல, பூஜாரியும் ஒருவராக இருக்கிறார் என்பது தெரிந்தது. தெரியவே எனக்குச்சிறுபருவத்தில்இருந்த பக்தி புகைந்துபோய்விட்டது.

பிரபுக்களின் பிள்ளைகள்படிப்பதற்கென உள்ள பிரத்யேகமான இராணுவக் கல்லூரிக்கு நான் சென்றேன்— அதுகேளிக்கைக் கூடம்—காமவேள் நடனசாலை—காசுகரைக்கும் இடம். குடியும் கூத்தியுமே அங்கு பாடபுத்தகங்கள். படாடோபம், மிரட்டுவது உருட்டுவது, மக்களிடம் அலட்சிய சுபாவம் காட்டுவது இவைகளே, அந்த இராணுவக்கல்லூரியில் நாங்கள் பெற்ற பாடம். பிரபுவாவதற்கான பயிற்சியே அங்கு அதிகம் பெறமுடிந்ததேதவிர, போர்வீரனாவதற்கான பயிற்சி குறைவுதான். யார் அதிகமாகப் பணத்தைச் செலவழிக்

28-ம் பக்கம் பார்க்க

## புதுவாழ்வு

34-ம் பக்கத் தொடர்ச்சி

"ஒருமணிநேரம்கூட ஓய்வு இருப்பதில்லை அவருக்கு. காலைமுதல் இரவுவரை வேலை தான். காலையிலே "ஸ்விம்மிங்" (SWimming) கிற்கு போகிறார். அதற்குமேல் சீட்டாட்டம். வந்து சாப்பிட்டானதும், கார்வந்து விடுகிறது, ஏறிக்கொண்டு ஆபீஸ் போகிறார். தபால் பார்த்துவிட்டு, செக்கில் கையெழுத்துப் போட்டுவிட்டு பேப்பர்படிக்க ஆரம்பித்ததும், டெலிபோனில் கிளப்மெம்பர்கள் கூப்பிடுவார்கள். சாயந்தரம் டென்னிஸ் ஆடவர வேண்டும் என்பார்கள். சாயந்தரம் அது தீர்ந்ததும், வீடுவந்து சாப்பிடுவார். சாப்பாடு முடிவதற்குள் வேறு யாராவது வந்து விடுவார்கள். 'பிக்சர்' போகவேண்டும் என்பார்கள், பனிரண்டு மணிக்குவருவார். அலுத்துத் தூங்குகிறார். பேச நேரமுண்டா? வீட்டிலே கொஞ்சநேரம் நிம்மதியுண்டா? வெளியே எப்போதும்வேலை. கார்மேல் கார் வருகிறது. இத்தனைக்கும், ஆபிசிலே ஐம்பதுபேர் வேலைபார்க்கிறார்கள். இப்படி ஓடிஓடி வேலைசெய்து,என்ன சேர்க்கவேண்டும்? பணமில்லையா? பாக்யமில்லையா? இருப்பதைவைத்துக்கொண்டு சாப்பிட்டாலே காலமுழுதும் போதும். அவர் என்னமோ இப்படி அலைகிறார்" என்று ரோஸ்பாய், தன் கணவன் மனோஹர் விஷயமாக, தோழியிடம் கூறுகிறாள்.

"வீட்டில் தான் இருக்கிறார். வேறு எங்கே போகப்போகிறார். வேலை வெட்டி இருந்தால் தானேபோக! கடையா, கம்பெனியா ஆபீசா, என்ன உத்தியோகம் இருக்கிறது? சாப்பிடுகிறார், வெற்றிலை போடுவார், வெளித் திண்ணையில்சீட்டாட்டம், உள்ளே வந்தால் தாயக்கட்டம். சாயந்தரம் ஒருமணிநேரம் வெளியே போவார். அவனைப் பார்த்தேன், இவனைப் பார்த்தேன், அடுத்த மாதம் கிடைக்கும் என்றார்கள், வேலை காலி ஆகவில்லை என்றார்கள் என்று சொல்லுவார். பழையபடி சீட்டுக் கச்சேரிதான். வீட்டிலில்லாமல் வெளியே ஏன் போகிறார்? என்றையதினம் அவருக்கு ஒருவேலை கிடைக்குமோ, என்றையதினம் என்குடும்பம் சீர்படுமோ தெரியவில்லை" என்று தன் கணவனுக்கு வேலை கிடைக்காததால் கவலைப்படும் வேதம், பக்கத்துவீட்டுப் பார்வதியுடன் பேசுகிறாள்.

30-ம் பக்கம் பார்க்க

## குப்பம்

மயிலாப்பூர், குப்பம்—அதன் அருகே உள்ள, கடலோரத்தில் ஒய்யார ஓய்விடம்!

குப்பத்தில் குடிசை—அதனெதிரே, நிலவொளியின் எழிலை ஆபரணமாகக் கொண்டு விளங்கும் மாட மாளிகை.

குப்பத்திலே கிடக்கும் சிறுபடகுகள்—அதன் அருகே, கடலோர ஒய்யார ஓய்விடத்தில் நிற்கும்விலையுயர்ந்தமோட்டார்கள்.

குப்பத்தில், மணலில் உலருவதற்காக விரிக்கப்பட்டிருக்கும் வலைகள்—ஓய்விடத்தில், வரும்ஒய்யார உருவங்கள் வீசும் காதல்வலை.

குப்பத்தில் கேட்கும் அழுகுரல்—அருகே ஒய்யார ஓய்விடத்தில் கேட்கும் கீதம்.

குப்பத்திலே சண்டை சச்சரவு—அருகே ஓய்விடத்தில் விவாதம், சரசம்.

குப்பத்தில், காலை முதல்பாடுபட்டதால் வந்த அலுப்பு—அருகே ஓய்விடத்தில், காலம் வீண் போகுதே! காதலனேகுகா! "என்ற முறையிலே வரும்சலிப்பு'

குப்பத்து மக்களுக்கு, ஓய்விட ஒய்யாரக் காட்சி, சினிமா!

ஓய்விட ஒய்யார உருவங்களுக்கு, குப்பம்,—அருவருப்புத்தரும் காட்சி.

குப்பம் —வறுமை—!
ஓய்விடம் —செல்வம்!!
குப்பம்—உழைப்பு'!
ஓய்விடம்—உறிஞ்சும்முறை!!
துப்பம்—ஓய்விடம்!

எத்தனைகாலத்துக்கு, இந்த முரண்பாடு இருக்க வேண்டும்! இத்தகைய கேள்வி, மக்கள் உள்ளத்தைக்குடைந்த குடைந்துதான், நவம்பர் 7ந்தேதிய புரட்சியை உண்டாக்கிற்று.

குப்பம் ஒருபுறம்—பக்கத்தில் குதூகலக்கூடம், என்று இருந்த நிலைமை ரஷியாவில்மாறிவிட்டது—மாற்றப்பட்டது.




**ரோம்,** பிரிட்டனை ஜெயித்தது—அடிமைப் பட்ட பிரிட்டனிலே, ரோம்நாட்டவர்கள், தூக்கு மரங்களை அதிகமாக அமைக்கவில்லை-ஆனால், ரோம் நாட்டிலே ரோம் நாட்டவர், தங்களிடம் வேலை செய்துவந்த, ஏழைகளை, அவர்கள், "எஜமானர்களை எதிர்க்கத் துணிந்தனர்" என்ற ஒரே காரணத்துக்காக, படுகொலை செய்திருக்கிறார்கள்—சமரிட்டு, அழித்தனர் ஏராளமான அடிமைகளை—அவர்கள்போக — சரணடைந்த, பிடிபட்டவர்களை, பாதைநெடுகத் தூக்குமரங்களை அமைத்து அவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றனர்—ஒரு நூறு ஒரு ஆயிரம் அல்ல—ஆறு ஆயிரம் ஏழைகள்!

ரோம், கலையை வளர்க்கத்தவறவில்லை இந்தப் படுகொலை செய்த காலத்திலேயும்! அந்த நாட்டிலே நளினிகளுக்குக் கீதம் பயனுவிக்கும் இசைவாணர்கள் இருந்தனர், சிற்றிடையாளின் சேல்விழி பேசுகிறது பாரீர் என்று வியந்துகூறி ஒரு சீமான் மற்றோர் சீமானிடம் காட்டி மகிழும்விதமான ஓவியம் தீட்டித்தர ஓவியர்கள் இருந்தனர்; எல்லாம் இருந்தது—ஏழைக்குமட்டும், உழைக்க வேண்டிய நிலைமையும், உரத்த குரலிலே இது அக்ரமமல்லவா என்று கேட்டால், தொங்குவதற்குத் தூக்கு மரமும் இருந்தது. எதிர்க்கத்துணிந்தவர்கள் 6000 பேர். பாதை ஓரத்திலே, தூக்கு மரங்களில் தொங்கினர். கண்முன்கொண்டுவந்து பாருங்கள், வழிநெடுக, வரிசையாக 6000 தூக்கு மரங்கள்! பயங்கரக்காட்சி அல்லவா!

பயங்கரப்பாதைதான், பாட்டாளி விடுதலை விரும்பினால், உரிமைக்காகப் போரிட்டால்.காண வேண்டும். அந்தப்பாதையைக்கண்டு கலங்கா நெஞ்சம் ஏற்பட்டாலொழிய, விடுதலை கிட்டாது.

நாம் கூறும் இந்த ஆறுஆயிரம் அடிமைகளின் பிணங்கள் பாதையிலே தொங்கிய சம்பவம், கதையல்ல, காவியமல்ல—வரலாறு. நிழல்தரப், பாதை ஓரத்திலே நல்லமரங்களை வைத்து வளர்க்கிறார்கள் இன்று—அன்றுங்கூடத்தான். ஆனால், ரோம் நாட்டவர், ஆறு ஆயிரம் தூக்குமரம் அமைத்தனர், பாதை ஓரத்தில். பாந்தசாம்ராஜ்யம்—சட்டத்துக்குப் பிறப்பிடம்—கிரேக்ககலாச்சாரத்தை மெருகிட்டு வழங்கிய இடம் இந்த ரோம்; ஆனால் பாட்டாளிக்குக்கிடைத்தது, தூக்கு மரந்தான்.

போரிலே தோற்றுவிட்டவர்கள், பிழைப்புக் காகத்திண்டாடுபவர்கள், ஆகியவர்களை, ரோம் நாட்டு ஜெமீன்தாரர்கள் — பண்ணை முதலாளிகள்—வேலைக்கு அமர்த்திக்கொண்டனர். இவர்கள் "அடிமைகள்" வேலை செய்ததால்மட்டுமல்ல, அந்தப்பெயர்—சட்டத்திலேயே அவர்களுக்குத் தரப்பட்ட அந்தஸ்து அவ்வளவுதான்.

தொழிலாளி—கூலிக்காரன்—அடிமை; மூன்று விதமான பெயரும், ஏழைதான் பெறமுடியும்; மூன்றுவிதமானவர்களும், ஏழைகள்—உழைத்தே பிழைக்கவேண்டியவர்கள்—ஆனால் மூவருக்கும், நிலைமை வேறு வேறு. தொழிலாளி—தனக்கு விருப்பமில்லாவிட்டால் வேலைக்கு வரமறுக்கும் நிலைமையையும், தன்னைக்காரணமின்றி வேலையிலி

10-ம் பக்கம் பார்க்க

## பயங்கரப்பாதை

9-ம் பக்கத் தொடர்ச்சி

ருந்து நீக்கினால், ஏன் என்று கேட்கும் உரிமையையும், உழைப்புக்கேற்ற பணம் தந்தாகவேண்டும் என்று கிளர்ச்சி செய்யவும், சட்டப்படி உரிமைபெற்ற நிலை பெற்றுள்ளவன்.

கூலிக்காரன், இதற்கு ஒருபடிமட்டம்—கிளர்ச்சிக்குவழி வசதி கிடையாது—ஆனால் இவனையும், வேலை செய்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தமுடியாது. தேவையானால் கூலிக்காரனை, உடைமைக்காரன் ஏதோவேலை செய்யச் சொல்வான், இஷ்டமிருந்தால் கூலியாள் வேலை செய்வான்—தொடர்பு அவ்வளவுதான்.

அடிமை நிலை அதுவல்ல—அவன்வேலைசெய்தே ஆகவேண்டும்—ஏன் என்று கேட்கமுடியாது—எவ்வளவு அளவு வேலை என்றுகேட்கமுடியாது—என்ன பணம் தருகிறாய் என்று கேட்கக்கூடாது—அவனை எஜமானன் அடிப்பான், சட்டம் குறுக்கிடாது—அவனைப்பட்டினி போட்டுச் சாகடிப்பான், சகஜம் என்று சர்க்கார் சும்மா இருந்துவிடும்—உண்மையில், அவன் கால்களில் சங்கிலியும் உண்டு.

இத்தகைய அடிமைகள், கேவலம் வயிற்றுச் சோற்றுக்காக, மாடென உழைக்க, வயல்கள் செழிக்க, அதன்பலனை உறுஞ்சிடும் ரோம்நாட்டு பண்ணை முதலாளி கொழுத்து வளர்ந்தான்.

இந்த அடிமைகளுக்கு அதிருப்தி, நெடுங்காலமாக—ஆனால் வெளிக்குக்காட்டும் வழிவகை கிடையாது. இவர்கள் எதுவும் எதிர்த்துச்செய்ய முடியாதவர்கள் என்ற எண்ணம் வலுப்பட்டுவிட்டது முதலாளிக்கு; எனவே, காடுகளிலே சென்று தமது கால்நடைகளைமேய்த்துக்கொண்டு வருவதற்காக இந்த "அடிமைகளை" அனுப்பும் போது, கையில் ஆயுதம்கூடக் கொடுத்தனுப்புவர்—துஷ்டமிருகங்களைக் கொல்வதற்கு.

குமுறும் மனம்! கையிலே, வெடிமருந்து ஆயுதம்!!

இந்த நிலையிலும் அவர்கள் எதிர்ப்புச்செய்ய வில்லை.

ஜூலியஸ்சீசர், எனும் மாவீரன் காலத்துக்குக் கொஞ்சம் முந்தியகாலம். ரோம்நாட்டு ரணகளச் சூரர்களாக; மாரயஸ், சல்லா, என்பவர்கள் விளங்கி, பலநாடுகளிலே ஜெயக்கொடி நாட்டிய காலம். அவர்களில், சல்லாவுக்கு நண்பன்ஒருவன் கிராஷஸ், என்பவன்—ரோம்நாட்டு முதல்கோடீஸ்வரன் இந்தக் கிராஷஸ்—இன்றைய ராக்பெல்லர்—மார்கன்—பிர்லா—போல, வியாபாரத்தால் பொருள் திரட்டி, இலாபத்தைக்கொண்டு,ரோம் நாட்டிலே ஏராளமான ஜெமீன்களை வாங்கி, கோடீஸ்வரனானவன். இவன், சல்லாவுக்குச் செல்வாக்கு ஏற்படும்படி தன்பணத்தைக்கொண்டு வேலை செய்தான்—சல்லாவுக்கு அப்படியே அதிகாரம் கிடைத்தது—அதிலே கிராஷஸ், தன்பங்கு பெற்றான். அதாவது இவனும் அரசாங்கத்திலே ஒரு செல்வாக்குள்ள மனிதனானான்.

பாடுபட்டுப்பாதி உயிரினராகப் பல்லாயிரம் அடிமைகள் ஒருபுறம். பணத்தைக்காட்டி, அரசியலில் செல்வாக்குத்தேடிக்கொண்ட கிராஷஸ் ஒருபுறம்.

கொடுமைக்காளாகிக் குமுறிக்கொண்டிருந்த அடிமைகளுக்கு, ஒரு தலைவன் கிடைத்தான்—அவன் சீமான்களின் பொழுது போக்குக்காக, குத்து குஸ்தி முதலிய வித்தைகளைக் காட்டி வாழ்ந்து வந்தவன்—அவனும் அடிமைதான்—எப்படியோ எஜமானிடமிருந்து தப்பித்துக் கொண்டான்—அவன் தன் இனத்தவரை—அதாவது அடிமைகளை, விடுதலைக்கான கிளர்ச்சிநடத்தும்படி தூண்டினான். குமுறல், வெடிக்கத் தொடங்கிற்று.

மாரயஸ், சல்லா, போன்ற வீரர்கள், வெளிநாடுகளை வென்று மாவீரர்கள் என்று புகழப்பட்டார்களல்லவா—கிராஷசும், அத்தகைய கீர்த்தி பெற விரும்பினான்— அரசாங்கத்திலேயோ செல்வாக்கு அவனுக்கு—எனவே அவன் படைத்தலைவனாக்கப்பட்டான். ஒரு பிரத்யேகப்படை—நாற்பதாயிரம் வீரர்கள் கொண்டது—வேற்று நாட்டின் மீதுபாய அல்ல—உணவு கேட்ட, உரிமைகேட்ட ஏழைகளின்மீதுபாய ஒருபடை, அதற்கு இந்தக் கோடீஸ்வரன் தலைவன்.

பயங்கரமான சண்டை — படுகொலை — கிளர்ச்சி அழிக்கப் பட்டது—களத்திலே மாண்டவர் போக—சிக்கினவர்கள், சரண்புகுந்தவர்கள்—ஆகியவர்கள் ஆறாயிரம் மக்கள்—அவர்களைத் தான், பாதை நெடுகத் தூக்குமரம் நாட்டித், தொங்க விட்டான்—பாதகன்—பாதகன்! சே!! கோடீஸ்வரன்!!

பயங்கரப் பாதை! அடிமைகள் விடுதலைபெற—தொழிலாளர் உரிமை பெற—ஏழைகடேற—இருக்கும் பாதை, சாமான்யமான சங்கடம் நிறைந்ததல்ல — பயங்கரமான விளைவுகள் கொண்ட பாதை—இன்று நேற்று அல்ல இந்த நிலைமை, ஏசு பிறப்பதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு நேரிட்ட நிலையைக் கூறினோம். ஏசுவந்தார், சுவிசேஷம் உரைத்தார்—ஆலயபூஜைமாறி தொழுகை மண்டபம் எழும்பிற்று—ஆனால்

30-ம் பக்கம் பார்க்க

# அவள் விபசாரியானள்!

★

"என்னடி அது, கூட்டுகிறசத்தத்தைக் காணேம்?"

"இதோ, பெருக்கிக்கிட்டுத்தானேய்யா இருக்கிறேன். பீரோ கண்ணாடியைத் துடைச்சேன்"

"கண்ணாடியைத் துடைச்சயா, கண்ணாடியை. கண்ணாடி எதிரேநின்று கொண்டு, அழகைப் பார்த்துகிட்டே போலிருக்கு. வரவர உனக்கு "ராங்கி" அதிகமாகுதுடி நண்டு!"

★

"நண்டு" என்று அழைக்கப்பட்ட வேலைக்காரியின் பெயர், மீனாட்சி. வேலைக்கு வந்த அன்று, "என்னடி பெயர்" என்று எஜமானி கேட்டபோது, "மீனுவுங்க" என்று பணிவுடன் பதில் சொன்னாள் வேலைக்காரி. 'மீனும், நண்டும்,' என்று கூறிக்கொண்டே மின்னல் கொடியாள், சிரித்தாள்—மீனுவுக்குத் தெரியுமா, அந்தச் சிரிப்பு எவ்வளவு அழுத்தக்காரர்களின் பெட்டிகளை எல்லாம், திறந்திருக்கிறது என்று. அவள் மரம்போல நின்றாள். அன்றுமுதல் மின்னல் கொடியாள், மீனுவை, நண்டு ஆக்கினாள்.

அன்று மின்னல்கொடியாருக்குப் பிரத்யேகமான சந்தோஷம். ஜெமீன்குடிகளின் பாதுகாப்புச் சங்கத்தலைவர் ஜெயச்சந்திரர், மின்னல்கொடியாளின், "முதலியாரிடம்" ஒரு பந்தயம் கட்டினார்—அதாவது, முதலியாருக்கு ஆண்குழந்தை பிறக்குமென்று—இல்லை, பெண்தான் என்று முதலியார் கூறினார்—"ஆண்" என்றார் ஜெயச்சந்திரர்—பந்தயம் என்ன? என்று மின்னல்கொடி. கேட்டாள் — ஒருவைர திருகுபில்லை—உனக்கு—என்றார் ஜெயச்சந்திரர்.

ஒரு வாரத்திற்கெல்லாம், 'முதலியாருக்கு' பெண்குழந்தைபிறந்தது. [வீட்டில் முதலியாரின் மனைவிக்கு] ஜெயச்சந்திரர் தோற்றார்—அதற்காக அவர் வருத்தப்படவில்லை—வைரத்திருகுபில்லையை தினந்தினம் மின்னல்கொடி தொடுவாளல்லவா, அது, அவருடைய இருதயத்தை அவள் பிரதிதினமும் தடவிக்கொடுப்பதற்குச் சமானம், என்று அவர் எண்ணிக்கொண்டார். கொஞ்சம் முந்திக்கொண்டதால், அவள் முதலியாரின் பொருளாகிவிட்டாள், இல்லாவிட்டால், ஜெயச்சந்திரர் தான்...........

மின்னல் கொடியாளுக்காகப் போட்டியிட்டவர்கள்பலர்—ஏழாவது கீர்த்தனை முடிவதற்குள் பாட்டு வாத்தியாருக்கும் பக்கவாத்தியக்காரருக்குமே பலமான போட்டி—சங்கீதவிஷயமாக அல்ல—மின்னல்கொடியாள் விஷயமாகத்தான்!

ஒருமுறை, மின்னல், தாளந் தவறிவிட்டாள்—பாட்டுவாத்தியாருக்கு, அது ஓர் அற்புதமான சந்தர்ப்பமாக அமைந்து விட்டது.

தக்க தக்கிட்டா, தக்கதக்கிட்டா, என்று உச்சரித்தபடி, சிட்டிகை போட்டுக் காட்டினார்—பிறகு—மின்னலின் "துடையிலே" அவரே அந்தத் தாளத்தைப் போட்டுக்காட்டினார். பாட்டு வாத்தியாருடன் ஒவ்வொரு நாளும் தவறாமல்வந்து மின்னலின் கீதப்பயிற்சியைக் கவனித்து வந்த, பிடில் முத்தையாவுக்குப் பிரமாதமான கோபம். "எப்படியய்யா, மின்னல் கொடியாளைத் தொட்டுத் தாளம் போட்டுக்காட்டலாம். ஏன், சொன்னால் போதாதா?" என்று கேட்க முடியுமா! தாளத்தின்மீது பாய்ந்தார் — அதாவது பாட்டு வாத்தியாரின் தாள ஞானத்தையே குறைகூறினார்—"உம்மிடம் எப்போதும் தாளம் சரியாக இருப்பதில்லை' என்றார். "அட அபசாரமே! நீயா

12-ம் பக்கம் பார்க்க

## விபசாரியானாள்

11-ம் பக்கத் தொடர்ச்சி

என்னுடைய ஞானத்தைக் குறைகூற வந்துவிட்டாய்!" என்று பாட்டுவாத்தியார் கண்டித்தார். "ஏனய்யா? உங்க ரெண்டுபேருடைய வித்வத்துவத்தைப் பற்றி விவாதித்துக்கொள்ள என்வீடுதானா இடம்? இதற்குத்தானா மாதம் பதினைந்து" என்று மின்னலின் தாயார் முருகாயி கூறியபிறகு தான், தாளச்சண்டை ஓய்ந்தது. இப்படிப்பலருக்குள், போட்டியை, சண்டையை மூட்டிவிட்ட மோகனசிரிப்புக்காரி அந்த மின்னல்கொடியாள்.

ஜெயச்சந்திரர் 'பரிசாக'க் கொடுத்த வைரத்திருகுபில்லையை, வைத்துக்கொண்டு, 'கூடத்திலே,' ஜவ்வாது பொட்டைச் சரி பார்த்துக் கொண்டிருந்த சமயம் அது. படுக்கையறையைக் கூட்டப்போன மீனா நிலக்கண்ணாடிமுன் நின்றுகொண்டிருந்தாள், இரண்டோர் நிமிஷம். கூட்டுஞ்சத்தம் கேளாது போகவேதான், மின்னல், 'நண்டு' வைக்கூப்பிட்டாள். கூப்பிட்டு, "அழகைப்பார்த்துக்கொள்கிறாயாடீ" என்று கேட்டாள். இல்லை என்று சொன்னாள் மீனா. அது, உண்மை, பொய் இரண்டும் கலந்த பேச்சு—மீனா கண்ணாடியைத் துடைக்கவில்லை — பார்த்துக்கொண்டுதான் இருந்தாள்—ஆனால் அவள்தன் அழகைப்பார்த்துக் கொள்ளவில்லை—நெற்றியிலே இருந்த "வீக்கத்தை"ப் பார்த்துக் கொண்டாள். அவளுக்குக் கிடைத்த பரிசு அது!

அவள் கணவன், "கோழிச்சண்டை" விடுபவன் — எத்தனையோ விதமான தொழில் செய்து பார்த்து, கடைசியில், அவன் இந்தத் தொழிலைக் கண்டுபிடித்தான். ஒவ்வொரு நாளும், பள்ளிக்கூடத்துக்கு முன்புறம், "கோழிச்சண்டை" விடுவான்—காசுதிரட்டுவான் — பந்தயம் கூடக் கட்டுவார்கள் சிலர். கோழி, மில்டரி ஓட்டல் சின்னான் "வாடகைக்கு"த் தந்து வந்தான்—அதாவது வாரத்துக்கு ஒரு ஜதை கோழிதருவான்—எப்படியோ பாடுபட்டு, அந்தக் கோழிகளுக்குச் சண்டை போடக்கற்றுக்கொடுத்து விடுவான் கொண்டான். கொண்டைய நாயுடு என்ற கையிலே, பெரியஎழுத்திலே 'பச்சை' குத்திக்கொண்டுதான் இருந்தான்—ஆனால் ஊரார் அவனைக் 'கொண்டான்,' என்றுதான் அழைப்பார்கள்—கோழிக்குச் சண்டைபோடும் திறமை வரும், ஞாயிற்றுக்கிழமையும் வந்துவிடும்—அன்று, ஸ்பெஷல் கோழிப்புலவு தயாராகிவிடும்—புதிய கோழிகள் கொடுப்பான் சின்னான் திங்கட்கிழமை. இப்படியே, கோழிகள் மாறிக்கொண்டே இருக்கும்—கோழிகளின் திறமைக்குத் தக்கபடி, கொண்டானுடைய, போதை ஒருநாளைக்கு கைலாயம்வரை அழைத்துச் செல்வதாக இருக்கும், ஒருநாளைக்கு எறும்புகடித்த மாதிரிமட்டுமேஇருக்கும். இந்தப்போதையின் அளவிலே அவன் அக்கரைகாட்டி வந்ததால், கோழி வாடகைக்குப் பெறுவதைவிட, சொந்தத்திலே வாங்கிவிடலாமே என்று எண்ணம் பிறக்கவில்லை. பிறந்தாலும் 'மாலையிலே அந்தச் சோலையிலே உள்ள மயக்கமருந்து', அந்த எண்ணத்தைக் கொன்றுவிடும்.

வாடகைப் பணத்தைச் சரியாகச் சில சமயம் கொடுக்க மாட்டான், கொண்டான். சின்னான் சீறுவான். கொண்டான், கெஞ்சிப்பழக்கமில்லாதவன். எனவே கோபமாகவே வீட்டுக்குவருவான்—மிகக்கஷ்டப்பட்டு விஷயத்தைத் தெரிந்து கொள்வாள் மீனா பிறகு, அந்த மில்டரி ஓட்டல் "அண்ணனை"ப்பார்த்து, நல்லதனமாகப்பேசி, கோழிகளைக் கொடுக்கும்படிசொல்வாள். அவனும் கொடுப்பான், மீனாவின் நடைநொடிபாவனை, முகவெட்டு, எல்லாம் சின்னானுக்குப் பிடித்திருந்தது—ஆனால் "அண்ணேன்" என்று அவள் கூப்பிடும்போது மட்டும், அவனுக்குக் கண்ணில் 'சால்னா'த்துளிவிழுந்த மாதிரி, எரியும். "அண்ணே" என்று மீனா சொன்ன உடனே, சின்னான், "ஏண்டிம்மா தங்கச்சி!" என்று கேலியாகப் பதிலளிப்பான். முதல் வார்த்தைதானது, பின்னால்வரும் வார்த்தைகள் எல்லாம் ஒப்புக்குக்கூறுவது, என்பது அவன் எண்ணம். மீனாவுக்கு அவனுடைய போக்குப். புரியாமல் போக

13-ம் பக்கம் பார்க்க

## விபசாரியாளன்

12-ம் பக்கத் தொடர்ச்சி

வில்லை. ஆனால் கொண்டானுக்குத் துரோகம் செய்ய அவள் மனம் ஒப்புவதில்லை. கோழிவாங்கிப் போகவரும் போது, ஒரு கப் "சாயா"வும் சின்னான் தருவான். 'ஏண்ணே! அவருக்கு ஒரு ஜதை கோழியை விலைக்குத்தான் வாங்கிக் கொடேன்; நீதான், பகவான் புண்யத்தாலே நல்லா சம்பாதிக்கிறயே, இந்த உபகாரம் செய்யறதானேண்ணேன்" என்று மீனா கேட்பாள். சின்னான் பரமதிருப்தி அடைவான்—'ஆவட்டும் தங்கச்சி! செய்வோம். எனக்கும் ரொம்ப நாளா மனசிலே எண்ணம் உண்டு. வேலைவரவேணுமில்லெ எதுக்கும்" என்று, கூறுவான். மீனா, அவன் எதற்கு வேலை தேடுகிறான் என்பதைப்புரிந்துகொள்ளவில்லை. அவளுடைய எண்ணமெல்லாம், எப்படியோ தட்டிக்கொடுத்துக் கொண்டே சின்னானுடைய உதவியைப் பெற்றுத் தன் புருஷனை ஒரு வழிக்குக்கொண்டு வரவேண்டும் என்பதுதான். சின்னானின் நோக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது— இஷ்டமில்லை — அத்தகைய சுபாவக்காரி அல்ல—ஆனாலும் — அவளிடம் சண்டைபோட்டுக்கொள்ளவும் இஷ்டமில்லை—என்னமோ ஒழிந்துபோகிறான் — நம்வரையில் நாம் ஜாக்ரதையாக இருப்போம்—என்று அவள், பாபம், எண்ணிக்கொண்டிருந்தாள்.

மின்னல் கொடியாளுக்குப் பரிசு கிடைத்த அன்று தான், வழக்கத்துக்கு மாறாகச் சின்னான், கோழி கேட்க வந்த மீனாவை, "தங்கச்சி! நல்ல சமயத்திலே வந்தே, வா, வா," என்று அழைத்தாள்— கபீலென்று இருந்தது மீனாவுக்கு, முகம் ஒருவிதமாகிவிட்டது, இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "என்னண்ணே, அவ்வளவு அக்கரையாக என்னைத் தேடின காரணம்" என்றுகேட்டாள்.

",தா! இத பாருமீனா? நான் எப்பவும், மனஷாளை மறக்கற வழக்கம் கிடையாது, என்று பொதுவான தத்துவம் பேசினான் சின்னான்.

இவ்வளவும், கடையின் தாழ்வாரத்தில் நடக்கிறது.

கடை அமைப்பே, அவளுக்கு அன்று தான் கொஞ்சம் பயம் தந்தது. தாழ்வாரத்துக்கும், உள்ளே சாப்பிட்டுக்கொண்டிருப்பவர்களுக்கும், கொஞ்சத் தூரம் இருந்தது — ஒருவருக்கொருவர் தெரிய முடியாது; குறுக்கே இருந்த சுவரை எடுக்கும் விஷயமாக, கட்டடக்காரருக்கும் சின்னானுக்கும் தகராறு.

"கொஞ்சம் மாவு இடிக்க வேணும் மீனா. ஆள்வரவில்லை" என்று 'சேதி'யை ஆரம்பித்தான் சின்னான்.

'அடேயப்பா! இதுக்கா தேடினேன் தேடினேன்னு சொன்னே. அதுக்கென்ன இடித்துத்தரேன். எங்கே உரல் இருக்கு,' என்றுகேட்டாள்மீனா "புழக்கடை நடையிலே இருக்கு. நீபோ, நான் ஆளை அனுப்புகிறேன்" என்றான் சின்னான்.

உண்மையாகவேதான் அரிசியை ஆள் கொண்டுவந்து கொடுத்தான்— மகிழ்ச்சியாகவே, மீனா, மாவு இடித்துக்கொண்டிருந்தாள். ஓட்டலில் கூட்டம் குறைந்தது. குறும்புக்காரராக இருந்த இரண்டோர் ஆட்களை, கடைவீதிக்கு வேறு வேலையாக அனுப்பிவிட்டான். சின்னான், முஸ்தீப்பு செய்துகொண்டு, "கல்லாவில்" வேறு ஆளை உட்காரவைத்துவிட்டு, மாவிடிக்கும்இடம் சென்றான். அவன் வந்தபிறகுதான், அந்த இடமும், ஒரு குகைபோலஇருப்பதுதெரிந்தது மீனாவுக்கு. கொஞ்சம் பயந்தாள். சின்னான், அவளருகே சென்று, கொஞ்சநேரம் நின்றுகொண்டிருந்தான். அவளும் அவனைக்கவனிக்காதவள்போலவே மாவிடித்துக்கொண்டிருந்தாள். போர் தொடுத்து விடுவது என்று சின்னான் தீர்மானித்து, "தா! ஏன் இப்படி அவசரம் அவசரமாக வேலை செய்யணும். கஷ்டமா இருக்குமே" என்று கூறிக்கொண்டே, அவள் கரத்தைப் பிடித்தான். அவன் எப்போதுமே பார்த்ததில்லை, அப்படிப்பட்ட பரிதாபமான பார்

14-ம் பக்கம் பார்க்க

## விபசாரியானாள்

13-ம் பக்கத் தொடர்ச்சி

வையை. மீனா கோபிக்கவில்லை, பதறவில்லை, பரிதாபம்கப்பிய முகத்துடன் அவனைப்பார்த்து "அண்ணே! வேண்டாம் அண்ணேன், அதெல்லாம் வேண்டாம். உனக்குக்கோடி புண்யம் உண்டு" என்றுசொன்னாள். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் தோய்ந்து வந்த சோகம், அவனைச்செயலற்றவனாக்கிவிட்டது. அவளும் மௌனமானாள்! அவனும் செயலற்று நின்றான். அவள் முகம் கடு கடுத்துக்கொள்ளவில்லை —ஆனால் தாயிடம் மன்றாடும் குழந்தையின் முகமாக இருந்தது மீனாவின் முகம். சிரிப்பதுபோலக்கூடக் காணப்பட்டாள்— அதாவது பற்கள் வெளியே தெரிந்தன— முகத்திலே மலர்ச்சி இல்லை. சின்னான், தோல்வியை சமாளித்துக்கொண்டு, "சரி! சரி! வேலை நடக்கட்டும்" என்று கூறிக்கொண்டே, அவளை அவசரமாக ஒருமுத்தமிட்டான். ஐயோ! கர்மமே!! என்று— அவள் கூச்சலிடவில்லை—கழுத்து நெரிக்கப்பட்டால் சிறுகுழந்தை அழுமே, அது போலச் சொல்லிக்கொண்டே, அவன் பிடியிலிருந்து விலகினாள் வேகமாக. அந்த வேகத்திலே, எதிரிலிருந்த சுவரிலே மோதிக்கொண்டாள். நெற்றியில் சிறிது காயம் — வீக்கம். சின்னான் சரேலென, அந்த இடத்தைவிட்டுப்போய்விட்டான்— வழக்கமாக உட்காரும் இடத்தில்சென்று, சோகமாக — உட்கார்ந்துகொண்டான். அவள் மாவு இடித்துவிட்டு, அதனை ஒழுங்காகத்தட்டிலே கொட்டி, ஓட்டல் ஆளிடம் கொடுத்துவிட்டு, வீடுவந்தாள். வரும் போது அவளும் சின்னானிடம் ஒன்றும் பேசவில்லை—சின்னானும் அவளைக்கவனிக்காதது போலிருந்துவிட்டான். கோழிகளை மட்டும் ஓட்டல் ஆள் கொடுத்தான்.

அந்த நெற்றி வீக்கத்தைத்தான், மீனா, மின்னல்கொடியாளின் படுக்கையறைக் கண்ணாடி முன்புநின்று, பார்த்துக்கொண்டாள்.

ஆண்களின் காமாந்தகாரத்தைத் தனக்குச்சாதகமாக்கிக்கொண்டு, அவள்—மின்னல்கொடியாள்— வைரத்திருகுபில்லையின் வனப்பைப் பார்த்துக்கொண்டிருந்தாள். வறுமையினால் தாக்கப்பட்ட மீனா, ஆணின் காமத்துக்குப் பலியாகவில்லை — ஆனால் நெற்றித்தழும்பு, அவளுடையவெற்றியைக் காட்டும் குறியாக இருந்தது. தழும்பைத் தடவிப்பார்த்துக்கொண்டிருந்தபோது அந்தத்தரித்திரத்தால்தாக்குண்டதையலின் மனதிலே, எவ்வளவு கொதிப்போ! யார் கண்டார்கள்!! எத்தனை ஏழைகளுக்கு இத்தகைய 'தழும்புகளோ' யார் கூறமுடியும்?

★

நாலு வருஷங்களாகிவிட்டன. நானாவிதமான மாறுதல்கள். கொண்டான், சிறை சென்றுவிட்டான். சின்னான், பெரிய ஓட்டல்காரனாகிவிட்டான்—குடிவகையும் கொடுத்து வாடிக்கைக்காரரைப்பெருக்கிக்கொண்டு. 'முதலியாரை' தேர்தல், சுரண்டிவிட்டது. ஜெயச்சந்திரருக்குத் தோல்வியும் தேய்பிறையும், சொத்தில், செல்வாக்கில் சகலத்திலும். மின்னல் கொடியாளிடம், மீனா பணிப்பெண் அல்ல. ஓட்டல் முதலாளிசின்னானின் 'வைப்பு.' குதிரைவண்டியில் வந்து இறங்குகிறாள், மின்னல் வீட்டுக்கு. "வாடிம்மா மீனா" என்று வரவேற்கிறாள் மின்னல். "என்னா அக்கா! உடம்புக்கு?" என்று சுகம் விசாரிக்கிறாள் மீனா. பழைய பீரோவும் — நிலைக்கண்ணாடியும் இல்லை. மீனாவின் நெற்றியின் திலகம் கொஞ்சம் கலைந்திருக்கிறது. மின்னல், அதனைச் சரிசெய்துவிடுகிறாள். அவள் கையில் அந்தத் தழும்பு தென்படவில்லை. நாலு ஆண்டுகள் ஆகிவிட்டன அல்லவா! மேலும், மீனாவின் தழும்பு நெற்றியிலிருந்து மறைந்து இருதயத்தில் பதிந்துவிட்டது. அவள் விபசாரியாகிவிட்டாள்! அக்காவுக்கு மற்றோர் தங்கை! ஆண்களின் காமப்பசிக்கு மற்றோர் இரை. சமுதாயத்துக்கு மற்றோர் சனியன். வறுமையில் புழுத்த புழு!!

# ★ நாடோடி ★

"நாடோடிப் பயல் - நாடோடி? பிழைக்கிற கழுதே இங்கேயே பிழைக்கக்கூடாதா? ரொம்பக் காரியமாக, சிதம்பரம் ஓடிஞறு...... போயி......" என்று எம்பெருமான் கேட்டார், தோட்டக்காரன், தன் மகன், விஷயமாக முறையிட்டுக் கொண்டபோது.

எஜமானர் எம்பெருமான்பிள்ளை - மான் அண்டு கோ சொந்தக்காரர். தோட்டக்காரன், எம்பெருமான்பிள்ளையின் தகப்பனுருக்குப் பால்ய சினேகிதம். "கால வித்யாசத்தாலே," அவன் தோட்டக்காரனுக நேரிட்டது. அது வேறு கதை. தோட்டக்காரனுக இருந்தாலும், தன் தகப்பனுருக்குப் பால்ய சினேகம் என்பதாலே எம்பெருமான்பிள்ளை, தோட்டக்காரனிடம் கொஞ்சம் அன்போடும் அக்கரையோடும் பேசுவது வாடிக்கை. அன்று தோட்டக்காரன் தன் மகனுடைய, 'கெட்ட நடவடிக்கை'யைப் பற்றி முறையிட்டுக் கொண்டு வரும்போதுதான், எம்பெருமான்பிள்ளை, நாடோடி-நாய்-கழுதை- என்று பேசித்தோட்டக்காரனிடம் தனக்குள்ள அக்கரையைக் காட்டிக் கொண்டிருந்தார்.

"என்ன பண்றதுங்க. நான் எவ்வளவோ சொன்னேன்."

"ஆமாம்! முந்தி அவன் நாகபட்டணம் போறபோதே கூட வேண்டாம்னு தான் சொன்னே"

"ஆமாங்க, எண்டாப்பா, நாகபட்டணம் போக வேணும்னு கேட்டேன். போய்த்தான் ஆகணும், அங்கே வேலை கிடைக்கும்னு சொல்லிவிட்டுப் போனுன்......"

"போன, பத்தாம் நாள், பாண்டிச்சேரிக்குப் போரேன்னு கடிதம் போட்டான். நானு கூடக் கொஞ்சம் சந்தோஷப்பட்டனுங்களே; தொலையட்டும், பாண்டியிலேதானே, என்மச்சான் இருக்கருன், அவனோடு இருந்து தொலைக்கட்டும்னு நினைச்சேன். அங்கே இரண்டு மாசம் சரியா இல்லை, நான் சிலோன் போகிறேண்டான்னு."

"போறவனோடு போய்க் கொண்டிருக்கிற போக்கு. உழைச்சி, ஊருக்கு அடங்கி இருக்க வேணும்னு, நாகபட்டினத்திலேயே இருக்க மாட்டானு, சிலோன் ஏன் போகணும்? அது தான் சொல்றனே, இதுகளுக்கு காலிலே சக்கரம் இருக்கு, சுத்திகிட்டே இருக்கும்."

"நான் தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன். டே! மருதாச்சலம், வேண்டாம்டா. நாம்ப ஏதோ கொஞ்சம் கௌரவமா வாழ்ந்தவங்க. கால வித்யாசம் கொஞ்சம் நொந்து போயிட்டோம்; ஊரோடே இருந்து எதுவோ ஒரு பிழைப்புக்கான வேலையைக் கவனிப்போம், நீ இங்கேயே இருடான்னு சொன்னேன், அவன், நீங்க சொல்ற மாதிரியா, அவன் காலிலே சக்கரம் இருக்கோ என்னமோ, நாகபட்டணம்டான்னு, புதுச்சேரின்னு, கடைசியிலே சிலோனுக்குப் போனுன். போனுன், முட்டாப்பய. இவனை என்னுண்ணு எண்ணியிருப்பாங்க அங்கே. நாடோடி போலிருக்குன்னு தானே சொல்லி இருப்பாங்க?"

"வேறே என்ன சொல்வாங்க? சிலோனிலே இருந்து மறுபடியும் தூத்துக்குடி வந்தானும், இப்ப சிதம்பரத்திலே இருந்து கடுதாசி போடருன், சிங்கப்பூர் போகிறதாக இருக்கிறேன்னு. நான் என்னத்தைச் செய்யறதுங்க."

"என்ன செய்ய முடியும்? அவன் சுபாவம் அப்படியாகிவிட்டது. நாடோடியாகி விட்டான். போயி, கெட்டு அலைஞ்சு, கழுதே, தானு வந்து சேரும்."

எஜமானர் நெடுநேரம் பேசிவிட்டார், மேலும் அன்று ஒரு கமிட்டிக் கூட்டம், அதற்குப் போக வேண்டிய அவசரம் இருந்தது. தோட்டக்காரனுக்குத் திருப்திதான், என்னமோ, எஜமானர், இவ்வளவு அக்கரையுடன், தன்னிடம் பேசினுரே என்பது பற்றி.

எஜமானர் சொன்னதிலே என்ன தப்பிதம் இருக்கு? பயல், நாடோடியாகத்தான் இருக்கிருன் என்று எண்ணிக்கொண்டே, தோட்டம் போய்ச் சேர்ந்தார், மருதாச்சலத்தின் தந்தை, மார்த்தாண்டம் பிள்ளை.

மான் அண்டு கம்பெனி, எம்பெருமானுடையது; ஆனுல் இது தவிர, அவருக்கு வேறு பல வியாபாரக் கம்பெனிகளில் தொடர்பு உண்டு. அப்படிப்பட்ட ஒரு கம்பெனியின் கமிட்டிக் கூட்டம்தான் நடந்தது — அதற்காகத்தான் அவசரமாகத் தோட்டக்காரரிடம் பேச்சை முடித்துக்கொண்டு, எம்பெருமான்பிள்ளை, சென்ருர்.

கமிட்டியிலே கொஞ்சம் சூடான விவாதம். கமிட்டியாரால் நியமிக்கப்பட்டிருந்த கம்பெனி மானேஜர்மீது புகார்கள், அவர் சரியாக வேலையைக் கவனிக்கவில்லை என்று. குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது, எம்பெருமான்

(அடுத்த பக்கம் பார்க்க.)

[15-ம் பக்கத் தொடர்ச்சி.]

பிள்ளை. அன்று குறுக்குக் கேள்விகளையும் அவரே தான் பூட்டினார்.

"ஆமாம் சார்! ஆறும் தேதிதானே ஆற்காடு போனீர்?"

"ஆமாம்! ஆற்காட்டிலேயே சரக்கு கிடைக்குமென்று சொன்னார்கள் போனேன். சரியாக, பஸ் சர்விஸ்கூட இல்லை. பாதிதூரம் ஜட்காவில் கூடப் போகவேண்டி நேரிட்டது."

"அது சரி! வேலையை அக்கரையாகப் பார்க்கா விட்டால் எப்படி ஆகுமய்யா? ஜட்காவிலே போனது ஒரு பெரிய பிரமாதமாக இருக்கு உமக்கு. இப்படி, உடல் குலுங்குவது கூடாது என்று எண்ணுபவர்கள், வீட்டோடு இருக்க வேண்டும், வேலை பார்க்கிறேன் என்று வருவானேன், கம்பெனிக்கு வீண் நஷ்டம் எதற்கு? உம்முடைய டயரியைப் பார்த்தாலே தெரிகிறதே, நீர் வேலை பார்த்த இலட்சணம். ஆற்காட்டுக்கு ஆறும் தேதி போயிருக்கிறீர், மறுதினமே திரும்பி ஊருக்கு வந்துவிட்டிருக்கிறீர்?"

"ஆமாம்! வராமல் என்ன செய்வது? ஆற்காட்டிலே சரக்குக் கிடைக்கவில்லை."

"உடனே மாப்பிள்ளை மாதிரி ஊருக்கு வந்துவிட்டீர்—ஏன், ஆற்காட்டிலே இல்லை என்றால், வேலூர் போய்ப் பார்க்கிறது?"

"ஆற்காடு போவதற்குப் பட்ட அலைச்சல் கொஞ்சமா? அலைச்சலோடு அலைச்சலா, வேலூருக்கும் போகணும்னு"

"உம்மாலே முடியலேன்னு சொல்லி விட வேணும். எதுக்காக, இப்படிக் கல்லுப் பிள்ளையார் போல, ஊரோடு உட்கார்ந்து கொண்டு இருக்கிறவர், மானேஜர் வேலைக்கு வரணும்? நம்ம கம்பெனி வியாபாரத்துக்குச் சுத்தி அலைஞ்சாதானே நடக்கும். கொட்டி இருக்கிறமே பணத்தை. உமக்கு ஊர் பேர் வருவது பெரிய சிரமமா இருக்கு"

"ஊர் சுற்றி, அலையாமலா இருக்கறேன். ஆற்காடு போய்வந்தபிறகு அடுத்தவாரமே, சோளிங்கிபுரம் போயிருந்தேன்."

"சோளிங்கிபுரம் போய்வந்ததை என்னய்யா, என்னமோ, சிலோன் சிங்கப்பூர் போய் வந்தது போலப் பேசிக் காட்டறே. பிரமாதமான பிரயாணம் செய்துட்டே போய்யா, ஆறும் தேதி ஆற்காடு போய் வந்த ஆசாமி, பதினாலாம் தேதி வரைக்கும் ஊரை விட்டு அசையவே இல்லை, ஒரு நாள் சோளிங்கிபுரம் போய் வந்தே, பிறகு மறுபடியும் ஏழு நாள், இங்கேயே இருந்திருக்கிறே, பிறகு ஒரு நாலு நாள், ஏதேதுவோ ஊர் போயிருந்திருக்கே......"

"அந்த நாலு நாள் நான் அலைஞ்சு திரிஞ்சது இருக்குங்களே, நாய் படாத பாடு பட்டிருக்கிறேன். நெல்லூர் எங்கே இருக்கு, அங்கு போயி, மறுநாளே புறப்பட்டு, சித்தூர் போயி வருகிற வழியிலே, வேலூரைப் பார்த்துக்கிட்டு, மறுபடியும் ஆற்காட்டுக்குப் போயி, காஞ்சிபுரத்திலே ஒரு மணி நேரம் இருந்து, அந்த வேலையைக் கவனிச்சிக்கிட்டு, மறுபடியும் ஊருக்கு வந்தேன். நாடோடி மாதிரியாகச் சுத்தி இருக்கறேன்"

"ஓஹோ! நாலு ஊரு போயி வந்தது, உமக்கு நாடோடி பிழைப்பாகத் தோணுதா? நாடோடியாகச் சுத்தினாதானேய்யா, வியாபாரம் நடக்கும்? மாசம் முன்னூத்திபத்தைத் மாதிரி, தொண்ணூறு ரூபா வாங்கிறயே — வெளியூர் போகாவிட்டா வியாபாரம் எப்படி இலாபம் தரும் — யார் அப்பன் வீட்டிலே இருந்து உமக்குச் சம்பளம் கொடுக்கறது? நாடோடியாமே, நாடோடி. ஆமாய்யா, ஆயாம்—நாங்களெல்லாம், வியாபார சம்பந்தமா வெளியூர் போகாமத்தானே இருக்கிறோம்! நாடோடியாம்! கட்டிப்போட்ட மாடு மாதிரி, பிடிச்சுவைச்ச பிள்ளையார் மாதிரி, இடிச்சி வைச்ச புளி மாதிரியா உள்ளூரிலேயே இருந்து கொள்ளேன், யார் உன்னை வேண்டாம்னு சொல்றவங்க. நம்ம கம்பெனிக்கு மானேஜராக இருக்க வேணும்னா, நாலு ஊரு அலைஞ்சு திரியத்தான் வேணும்—தூத்துக்குடி தொலைவாச்சே, பெங்களூரிலே குளிராச்சே, நெல்லூரிலே வெள்ளமாச்சேன்னு பேசினா, கம்பெனி என்ன ஆவது? அலையத்தான் வேணும், திரியத்தான் வேணும், இன்றைக்கு ஒரு ஊரு, நாளைக்கு ஒரு ஊருன்னு போய்த்தான் வரவேணும். இதோ பாரய்யா! மானேஜர்! நான் திட்டமா, கண்டிப்பாச் சொல்லி விடுகிறேன், கேட்டுக்கோ. என்மேலே குறை சொல்லாதே. நம்ம கம்பெனிக்கு, அலைஞ்சு திரிகிற ஆசாமி தான் வேணும். ஊரோடு இருக்கணும், வெளியூர் அடிக்கடி போக முடியாதுன்னு நினைச்சா, கணக்கைத் தீர்த்துக்கோ. நாலு ஊரு போய் வந்திருக்கிறே, ஏனய்யா, இன்னும் சில இடத்தைப் பார்த்திருக்கக் கூடாதா என்று கேட்டதற்கு, உன் வாய்க் கொழுப்பு, நாடோடியா நானு அலையறதுக்குன்னு கேட்டிருக்கிறே. இதோ பாரய்யா, வெளியூர் போகவா இருக்கிறதுதான் வியாபாரி இலட்சணம்னு நான் சொல்கிறேன். உள்ளூரோடே இருந்த கொண்டிருப்பவனை, குண்டு சட்டியிலே குதிரை ஓட்டுகிறவன்னு சொல்கிறேன். நீ என்ன சொல்ல முடியும் அதற்கு? நாடோடியாம் — நாலு ஊரு போகவா இருந்தாத்தானே கம்பெனி நடக்கும். நீ நாடோடியாக இருக்க வேணும்னு, மகாராஜாக, நீ உண்டு, உன் வீடு உண்டு, இந்த ஊர் உண்டுன்னு இருந்து கொள்வதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை, மத்தவங்களுக்கும்

ஆட்சேபனை இருக்காது. இங்கே இருக்கிற நாங்களெல்லாம் நாடோடிகதான், இன்னிக்கி ஒரு ஊரு, நாளைக்கு ஒரு ஊருன்னு போய் அவரவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கிறவங்கதான். உனக்கு வேணும் அந்த நாடோடிப் பிழைப்பு — நீ பட்டத்து ராஜா, அரண்மனையை விட்டு வெளியே வரவே வேணும், போ."

கமிட்டி, எம்பெருமான்பிள்ளையின் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி விட்டது. மானேஜருக்கு வேலை போயிற்று. அடுத்தவாரம்-ஜோலார்ப்பேட் ஜங்ஷன்-மலபார் மெயில் வந்து நின்றது. எதிர்ப்புறத்திலே இருந்து பெங்களூர் மெயிலும் வந்து நின்றது. மலபார் மெயிலிலிருந்து எம்பெருமான் பிள்ளை இறங்கி, பிளாட்பாரத்தில் உலாவிக்கொண்டிருந்தார். பெங்களூர் வண்டியிலிருந்து, எம்பெருமானின் நண்பர், கம்பெனி டைரக்டர்களில் ஒருவர் சம்பந்தம் பிள்ளை, அவர் இறங்கி வந்தார். "அடடே! பிள்ளையவாளா? மைசூரிலிருந்தா?"

"மைசூரிலே இருந்து நேற்றே வந்துவிட்டேன் — பெங்களூரில் கொஞ்சம் வேலை இருந்தது, பார்த்துக்கொண்டு புறப்பட்டேன், நீங்க, கோயமுத்தூரா?"

"கோயமுத்தூரிலே காலையிலே கொஞ்சம் வேலையைப் பார்க்கணும் — மத்யானமா பாலக்காடு போகலாம்னு இருக்கிறேன் —"

"நானும், நேரா மெட்றூஸ் போகிறேன். அங்கு போன பிறகு, மார்க்கட் நிலவரத்தைப் பார்த்துவிட்டு, மங்களூர் போகணும்..."

"மசுலிப்பட்ணம் போகவேணும்னு சொன்னீரே?"

"ஆமாம், அங்கேயுந்தான் போய் வரணும். வேலை சரியாக இருக்கு. இரயிலில் இடம் சௌகரியமாக் கிடைச்சுதா?"

"செகண்டு கிளாஸ் கிடைக்கலே, பஸ்ட் கிளாஸ் வாங்கிக்கொண்டு வருகிறேன்."

"சரி! பாலக்காடு முடிந்ததும், நேரே ஊருக்குத்தானே?"

"ஆமாம்! ஊருக்கு வந்து உப்பங்கழி காண்ட்ராக்ட் வேலையைக் கவனித்துவிட்டு, உடனே ஊட்டி போகவேணுமே, நம்ம பம்பாய் சேட் மூல்ஜீ வந்திருக்கிறான் ஊட்டியிலே, என்னமோ அமெரிக்கன் ரேடியோவுக்கு ஏஜண்டு வேணும்னு சொன்னானாம், அதை எடுத்துவைப்போமேன்னு ஒருயோசனை"

"செய்யறது. சரி! ரயில் புறப்படப்போவுது. வரட்டுமா?,'

இரயில்கள் புறப்பட்டுவிட்டன. இரண்டாம் வகுப்பிலே சம்பந்தம், 'அப்பா! பயல், பணத்துக்

இதன் தொடர்ச்சி 36-ம் பக்கம் பார்க்க.

## புரட்சி வெளியீடு

தோழர்களே!

நவம்பர் புரட்சி சம்பந்தமான பலகட்டுரைகளும், படங்களும் இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். இதற்கெனத் தனி முயற்சியும், தனிச்செலவும் தேவைப்பட்டது. எதிர்பார்த்ததைவிட, செலவுவகை அதிகப்பட்டுவிட்டது-செலவின் அளவும் அதிகரித்துவிட்டது. எனவே புரட்சிவெளியீடு, வாசகர்களுக்குத் திருப்தி அளிக்கும் அளவில் இருக்கவேண்டும் என்ற எமது எண்ணம் வெற்றி பெற்றது — ஆனால், இதன்பயனாக ஏற்பட்ட அதிகச்செலவு, காரியாலயத்தைக் கவலைக்குள்ளாக்கிவிட்டது. இதழின் விலையைக்கூட்டவேண்டும் என்ற யோசனை, பொதுவாகவே, இரண்டணா விலையாக்கவேண்டும் என்ற யோசனையைப் பலதோழர்கள் நமக்குக் கூறிவந்திருக்கிறார்கள். ஆனால் விலையைக்கூட்டி வாசகர்களின் சிரமத்தை நாம் அதிகப்படுத்த விரும்பவில்லை. இந்த இதழால் ஏற்பட்ட அதிகச்செலவையும் அதுபோலவே நாம் விலையை அதிகப்படுத்தி ஈடு செய்து கொள்ளத் துணியவில்லை—வாசகர்களுக்கு அதிக சிரமம் தரக்கூடாது என்பதற்காக. ஆனால், பிரத்யேக வெளியீடுகள், மலர்கள் என்ற பெயருடன், வேறு பலர் இதழ் வெளியிடுவோர், குறித்துள்ள விலையுடன், இன்று உம்மிடம் உள்ள திராவிட நாடு இதழின் விலையை ஒப்பிட்டுப் பார்க்கக் கேட்டுக்கொள்கிறோம்.

அதிகவிலை கொடுப்பது சிரமமாகும் என்று கருதக்கூடிய வாசகர்களுக்கும் தொந்தரவு ஏற்படக்கூடாது; எமக்கும் இதனால் ஏற்பட்ட அதிகச்செலவு ஈடுகட்டியாகவேண்டும். இந்த நிலைமையை நண்பர்களிடம் விளக்கினோம், இதைஈடுகட்டுவதற்காக, பொருளுதவி செய்யக்கூடியவர்கள், மனமுவந்து உதவ முன்வருமாறு கேட்டுக்கொள்ள. இந்தச் சிரமத்தை உணர்ந்து உதவி செய்யும் வசதியும் படைத்தோர், பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# திராவிட நாடு

காஞ்சி) 17-11-46 (ஞாயிறு


## மூடு பனி விலக!

★

சோவியத் ரஷியா, உலகின் கவனத்தை இழுக்கும் சக்திபெற்றுவிட்டது. மலடோவின் புன்சிரிப்புக்குத் தவம் கிடக்கவேண்டிய நிலைமைக்கு வல்லரசுகள் இன்றுவந்துவிட்டன—அத்தகைய உச்சநிலை இந்நாட்டுக்கு வந்துவிட்டது-முப்பதாண்டுகளுக்கு முன்புவரை, அதே நாடு, வல்லரசுகளின் வலையில் சிக்கிக்கிடந்தது; மதவாதிகளின் மாயச்சேற்றிலே அமிழ்ந்து கிடந்தது, ஜாரின்பிடியிலே, ரஸ்புடீனின் கபடத்திலே, சீமான்களின் களியாட்டத்திலே சிக்கிச் சீரழிக்கப்பட்ட நாடாக இருந்தது. பஞ்சத்தையும் படுகொலையையும் கண்டது; கொடுங்கோலரையும் வறுமையையும் கொண்டு நெளிந்தது. அத்தகைய நாடு, இன்று, உலகில் வேறு எங்கும் காணமுடியாத சோபிதத்துடன் விளங்குகின்றது.

சோவியத் ரஷியாவின் இந்தப் புதுநிலையை மறுப்பார் இல்லை. புதியசக்தி பெற்றுவிட்டது என்பதற்கு விளக்கம் அதிகம் தேவையில்லை. வல்லரசுகள் பலவும் இன்று சோவியத்தின் பலத்தைக்கண்டு, பயம் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

நோய் கொண்டிருந்த நாடு, இன்று, பலம் பெற்று விளங்குகிறது. காட்டுமிராண்டிக்காலநிலை மாறிவிட்டது—கணப்போதில்! ஆம்! முப்பதாண்டுகள், ஒரு நாட்டு வாழ்நாளிலே, ஒருகணம்தானே! இதற்குள் கொடுங்கோலர்கள் விரட்டப்பட்டனர், கபடசன்யாசிகள் ஒழிக்கப்பட்டனர், முதலாளித்துவம் முறியடிக்கப்பட்டது, புதிய ஆட்சிமுறை ஏற்பட்டுவிட்டது, புதியதோர் உலகேதோன்றிவிட்டது. இதனை மறுப்பார் இல்லை—ஆனல் இதன் முழுஉண்மை—முழுச்சித்திரம்—மக்களுக்குத்தெரிய ஒட்டாதபடி, தப்புப்பிரசாரம் எனும் மூடுபனிப் படலத்தை அமைக்கும் வேலையில் ஈடுபட்டவர்கள்பலர். நாம்அந்த மூடுபனியை நமது சக்திக்கேற்ற அளவு அழிக்க முயற்சிக்கிறோம், இந்த இதழ் மூலம். சித்திரவதைக்கு ஆளான மக்கள், சீறி எழுந்து போரிட்டு, சீரும் சிறப்பும் பெற்றது மானிடவர்க்க வரலாற்றிலே, முக்கியமான பகுதி. அவர்கள்பட்ட கஷ்டத்தை அவனி அறியாவண்ணம், முதலாளித்துவம் தப்புப்பிரசாரம் செய்துவந்தது—வருகிறது. சமீபகாலம் வரையில் சோவியத்தை அழிப்பதற்கே, வல்லரசுகள் பலவும் தமது பணபலத்தைப் பயன்படுத்தி வந்தன, எனினும் வெற்றி அவர்கட்கு இல்லை. ஒவ்வோர் நாடும் இன்று தத்தம் எல்லையைப்பாதுகாக்கின்றன, "எப்பக்கம் வந்து புகுந்திடுமோ? ரஷ்யா, எத்தனை பட்டாளம் கூட்டிவருமோ?" என்றவீண் பீதிகொண்டு. பட்டாளம் தேவையில்லை—வரவும் வராது—ஏழையின் கண்ணீரிலே, பாட்டாளியின் பெருமூச்சிலே, விவசாயியின் விசாரத்திலே, தேவையான அளவு பட்டாளம் இருக்க, சோவியத், படையை இங்கு அனுப்புவானேன்!

சோவியத் படை எடுப்பு—ரஷிய ஆதிக்கம் என்பனபோன்றவைகள்-கடைசிக்கட்டத்திலே வந்துநிற்கும் முதலாளித்துவத்தின் குளறல்.

இந்தப் பீதியைக்கிளப்பி விடுவதன் மூலம், சோவியத்தின்மீது மக்களுக்கு அருவருப்பு வருமாறு செய்து, அதைத்துணை கொண்டு, சோவியத்முறையான சமதர்மத்தின் மீது வெறுப்பு ஏற்படும்படி செய்து, முதலாளித்துவம் சிறிதுகாலம் பிழைத்திருக்கலாம் என்று ஆசைகொண்டிருக்கிறது. அந்த ஆசை நிறைவேறாது! ஏனெனில் நாம் முன்பு குறிப்பிட்டபடி ஏழையின் விழியில் நீர் வழிகிறது! இது சமூகம் புது அமைப்புத் தேடுகிறது என்பதற்கான அறிகுறி.

இந்த நிலையிலேதான், தப்புப்பிரசாரத்துக்கு இலக்கான ரஷியாவைப்பற்றிய சில உண்மைகளை எடுத்துக்கூறும் கடமையை நாம் களிப்புடன் ஆற்றமுன் வந்தோம். இதனை நமது கடமை என்று நாம் கொள்வதற்குக்காரணமும், உரிமையும் இருக்கிறது. ஏனெனில், பெரியாரின் இயக்கத்தைச் சார்ந்தவராகிய நாம், சமதர்மத்தையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறோம்.

"ஒருவன் உழைப்பில் ஒருவன் நோகாமல் சாப்பிடுகிறது என்கின்ற தன்மை இருக்கின்ற வரையிலும், ஒருவன்தினம் ஒரு வேளைக் கஞ்சிக்கு மார்க்கமில்லாமல் பட்டினிகிடந்து சாவ

தும், மற்றொருவன் தினம் ஐந்துவேளை சாப்பிட்டுவிட்டுச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு வயிற்றைத் தடவிக்கொண்டிருக்கிறதும் ஆகிய தன்மைஇருக்கிறவரையிலும், ஒருவன் இடுப்புக்கு வேஷ்டி யில்லாமல் திண்டாடுவதும், மற்றொருவன் மூன்றுவேஷ்டிபோட்டுக்கொண்டு உல்லாசமாகத் திரிவதுமான தன்மை இருக்கின்றவரையிலும், பணக்காரர்களெல்லாம் தங்கள் செல்வம் முழுமையும் தங்களுடைய சுயவாழ்வுக்கே ஏற்பட்டது என்று கருதிக்கொண்டிருக்கிற தன்மை இருக்கின்றவரையிலும், சுயமரியாதை இயக்கம் இருந்தே தான் தீரும்.''

*பெரியார், ஜாதிமத ஊழல்களை மட்டுமல்ல, மக்களிடை காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் இதுபோலப் பலமாகக் கண்டித்து வருகிறார், என்பது அனைவருக்கும் தெரியும். உண்மையைக் கூற வேண்டுமானால், சமூக சீர்திருத்தத்துக்காகப் பாடுபடும் அவரை, விஷமிகள், ''நாத்திகர்'' என்று பாமரரிடம் கூறி வந்தது போலவே, ''பொது உடைமை வாதி இவர்'' என்றும், சர்க்காரிடம் சாடி கூறினர். அவருடைய வேலைத்திட்டத்தை ஒரு காலத்தில், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி போன்றவர்கள், பொது உடைமைத்திட்டம் என்று கூறினதுண்டு.*

*பெரியார், இவைகளைக் குற்றச் சாட்டுகளாகக் கருதிச் சளைக்கவில்லை.*

*சமதர்மப் பிரசாரத்தை தமிழகத்தில் தளராது செய்து வந்தார். அதுவும் ஏட்டுப்படிப்பின் பயனாக அல்ல- அனுபவத்தின் துணை கொண்டு மட்டுமல்ல-நேரடியாகச் சோவியத்சென்று, அங்கு புது உலகு பூத்திருக்கும் அழகினைக் கண்டு உண்மை நிலையினைத் தெரிந்து கொண்டு அந்தப் பிரசாரத்தைத் துவக்கினார்.*

*அது மட்டுமல்ல உண்மை. அவருடைய ஜாதி ஒழிப்புப் பிரசாரமுங் கூட, வெறும் மதத்திருத்தமோ, மக்களிடை ஏற்பட வேண்டிய மனத்திருத்தமோமாத்திரமல்ல, ஜாதிமுறையையே - வர்ணாஸ்ரமத்தையே, அவர் முற்காலத்தில் தந்திரசாலிகள் அமைத்துக் கொண்ட பொருளாதாரச் சுரண்டல் முறை என்று நம்புகிறார்-தக்க காரணம் காட்டி இதனை நிரூபித்திருக்கிறார். ஆகையால், ஜாதி முறையை அவர் எதிர்க்கிறார் என்றால், பொருளாதார பேத நிலையை உண்டாக்கியதும், நிலைத்திருக்கச் செய்வதும், இனியும் வளரச்செய்யக்கூடியதுமான கொடிய ஏற்பாட்டைத் தாக்கித் தகர்க்கிறார் என்றே பொருள்- அதாவது சமதர்மத்துக்கான சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்.*

*தமிழகத்தாரின் மனதிலே கிடக்கும் பழங்காலக்கொள்கைகளை, அவர், ஜாதீய முறையின் மூலம் வளர்ந்துள்ள முதலாளித்துவத்தின் முடிக்கயிறுகள் என்று எடுத்துக்காட்டியே கண்டிக்கிறார். அவருடைய பெரும்படையின் பணி, சமதர்மத்துக்கே பயன்படுகிறது-பிறர் அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பினும் - மதிப்பிடக் கூசிடினும். இத்தகைய பணி, சோவியத்தில், தேவையான அளவுக்கு மேல், புரட்சிக்கு முன்பு செய்யப்பட்ட காரணத்தாலே தான், புரட்சி சாத்தியமாயிற்று. பாட்டு, கூத்து, கதை, காவியம், ஓவியம் முதலிய பல்வேறு துறைகளிலும், இதற்கான பிரச்சாரம்செய்யப்பட்டு, ஏழைரஷியன் மனதிலே, தூவப்பட்டிருந்த நெடுங்காலக் கருத்துக்களை அறவே ஒழித்ததால் தான், மாவீரன் லெனின், புரட்சி மார்க்கத்தைக் காட்டியவுடன் சிங்கக்கூட்டம் சீறி எழுந்தது, கிழித்து எறிந்தது பகைக் கூட்டத்தை.*

*இந்த மூலக்கருத்தை நன்கு தெரிந்ததாலேயே, இன்று பெரியார் நடத்திச் செல்லும் இயக்கம், நாட்டு மக்களிடை நல்லறிவுப் பிரசாரத்தை விடாமல் செய்து வருகின்றது; இலட்சிய பாதையில் நடந்து சென்ற வண்ணம் இருக்கிறது. அதன் இறுதியில், சோவியத் சோபிதம் காண வேண்டும் என்ற உறுதியுடன். இதன் பயனாகவே, நாம், நவம்பர் புரட்சி சமயத்திலே, சோவியத் நாட்டுச் சோபிதத்தை விளக்கும் கட்டுரைகளையும், அது போன்ற புத்துலகம் காணவேண்டின், எதுபோன்ற சூழ்நிலை தேவை என்பதை விளக்கிடும் கட்டுரைகளையும் வெளியிட்டிருக்கிறோம். நாடோடியின் நிலைமை, விபசாரம் பிறக்கும் வழி என்ற பல்வேறு சித்திரங்களும் இன்று நாட்டிலே காணக்கூடியன. தெருக்கோடியில், பாதை ஓரத்தில், பட்டினத்தில், பட்டியில் எங்கும் நீங்கள் இவர்களைச் சந்திக்கலாம். இவர்கள் சமூகத்திலே உள்ளதற்கான காரணம் என்ன, என்ற சிந்தனையைக் கிளறவே, இக்கட்டுரைகள். இதழ்பெற்றுப் பயன் பெறுவர் தமிழர் என்று நம்புகிறோம்.*




ஏழையின் கண்ணீரைக் கண்டு இரக்கம் கொண்டு, அவர்கள் துயரை நீக்க வேண்டும் என்று, பலர், எண்ணினதுண்டு; சிலர் முயற்சித்தது முண்டு. பெரும்பாலானவர்கள் செல்வவான்களுக்கு நல்ல மனம் இருக்க வேண்டும், தர்ம சிந்தனை வேண்டும் என்று கூறி வந்தனரேயன்றி, ஏன், ஏழ்மை தோன்ற வேண்டும் என்று ஆராய்ந்ததில்லை. மற்றுஞ் சிலர், ஆத்திரமடைந்து, ஏழைகளைச் செல்வவான்கள்மீது மோதும்படி செய்திருக்கின்றனர். இது வெறும் அமளியாக முடிந்ததே யொழிய, அடிப்படையை மாற்றவில்லை. மாளிகைகள் தரைமட்டமாக்கப்பட்டு, சீமான்களின் சிரம் வெட்டப்பட்டு, ஏழை, வெற்றிக் கோலத்தோடு காணப்பட்டான், புயல் நீங்கிய பிறகு; பழையபடி, மெள்ளமெள்ள, செல்வவான் — ஏழை என்றபேதம் தலைகாட்டிற்று. அதாவது, அமளிகள் ஆத்திரத்தின் விளைவுகளாக மட்டுமே இருந்ததால், ஏழைகள், நெடுங்காலமாக அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துக் கொள்வதோடு, அவர்களின் சக்தியும், புத்தியும் நின்றுவிட்டது. முறை மாறவில்லை. நோயின் மூலம் கண்டு பிடிக்கப்படவில்லை. இது போலப் பயனற்ற, ஆனால் பயங்கரமான, பல சமர்கள், ஏழைகளின் கஷ்டத்தைப் போக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் நடத்தப்பட்டன, ரஷியப் புரட்சிக்கு முன்பு, பல் வேறுநாடுகளிலே. திக்குத்தெரியாமல், கொந்தளிக்கும் கடலில் சிக்கித் தவிக்கும் மரக்கலம் போல், பல கிளர்ச்சிகள் பாழ்பட்டுப்போயின. ஆனால் தோற்ற ஒவ்வொரு கிளர்ச்சியும், மக்களுக்குள் உள்ள பேதம், சிற்சில சமயங்களிலே, மனிதனுக்குள் பதுங்கிக்கொண்டுள்ள மிருகத்தைத் தட்டி எழுப்பிவிட்டு விடக்கூடும் என்ற உண்மையை வெளிப்படுத்தின. பலதோல்விகளுக்குப்பிறகே, வெற்றிப்பாதையின் திக்குத் தெரியலாயிற்று.

இந்நிலை வருவதற்கு முன்பு முயற்சி செய்து, தியாகத்தீயிலே வீழ்ந்தவர்கள் பலர். அத்தகைய வீரர்களில் ரோம்நாட்டு இருசகோதரர்களின் வரலாறு, மிகவும் முக்கியமானது.

இன்று, ஜெமீன் ஒழிப்புப்பற்றிச் சர்வ சாதாரணமாகப் பேசுகிறோம். ஜெமீன்தாரர்களேகூடத், தங்கள் ஆதிக்ககாலம் முடிவடைகிறது என்பதை உணருகிறார்கள். ஒருசிலர், பழயமுறையை நீடிக்கச் செய்யப் பஞ்சதந்திரம் நடத்திப்பார்க்கின்றனர்—பலிக்கிற வரையில் இலாபம் என்ற நோக்குடன். இவ்வளவு சாதாரணமாக இன்று பேசப்படும் ஜெமீன் ஒழிப்பு விஷயமாகப் பணிபுரிந்து, தியாகத்தீயில் குதித்தவர்கள், இந்த இருசகோதரர்கள், டைபீரியஸ் கிரேக்கஸ், கேயஸ் கிரேக்கஸ் என்பவர்கள்; செல்வக்குடி பிறந்தவர்கள்; செல்வாக்கு அடைந்தவர்கள்; படித்தவர்கள்; ராணுவத்திலும் புகழ் பெற்றவர்கள்; இருந்தும், ஏழைகளுக்குப் பாதுகாவலராகத்துணிந்தனர்—அவர்களை, ஆதிக்கக்காரர்கள் அழித்தனர்.

டைபீரியஸ் கிரேக்கஸ், படித்துப் பண்பு பெற்றதுடன், போரிலே ஈடுபட்டுத்தாய் நாட்டுக்குச் "சேவை" செய்து கீர்த்தியும் வாய்ந்தவன். அக்காலத்தில், ரோம், வெளி நாட்டவருடன் போரிட்டு வெற்றிபெற்

றால், தோற்ற நாட்டவரின் நிலபுலங்கள், ரோமுக்குச் சேர்ந்து விடும். இவ்விதம் இத்தாலியில் விஸ்தீரணமான பூமி, ரோமுக்குக்கிடைத்தது. இதனை, கைவலுத்தபணக்காரக்குடும்பங்கள், கைப்பற்றித் தமதாக்கிக்கொண்டன, இதன் பயனாக, ரோம் நாட்டில், பெரியபெரிய ஜெமீன்தாரர்கள் ஏற்பட்டனர். வெற்றிமேல் வெற்றி ரோமுக்குக் கிடைத்தது; வியாபாரமூலம் வேறு பொருள் குவிந்தது; போகபோக்கியங்களுக்குக் குறைவில்லை. இவ்வளவும், சீமான்களுக்குச் சுகமளித்தன, ஏழை, செக்குமாடென உழைத்து அலுத்துக் கிடந்தான். இந்தநிலையைக்கண்ட, டைபீரியஸ் கிரேக்கஸ், மனம்பதறி, இந்த ஜெமீன்தார்களின் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டுமென்று தீர்மானித்தான். டைபீரியசுக்கு அப்போது வயது 36. மக்கள் ஆட்சிமன்றத்திலே, ட்ரைப்யூன் என்ற பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டான். உடனே, தன் இலட்சியத்தைத் திட்டமாக்கி, யாரும், 500-ஏகருக்குமேல் நிலம் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது—அந்த அளவுக்குமேல் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களிடமிருந்து, சர்க்கார் நிலத்தைப் பறிமுதல் செய்து, ஏழைகட்கு, பங்கிட்டுத்தரவேண்டும் என்றோர் சட்டம் கொண்டுவந்தான். ஜெமீன் தாரர்கள் சீறினர்—இவன் யார்? பரம்பரை பாத்யதையைப் பறிக்கப்பார்க்கும் பாதகன் என்று கண்டித்தனர்—மக்கள் ஆட்சி மன்றத்திலேயே டைபீரியசுக்கு எதிர்ப்பை ஏற்படுத்தினர். என்றாலும், டைபீரியசால், கொண்டு வரப்பட்ட திட்டம், சட்டமாக்கப்பட்டுவிட்டது. டைபீரியஸ் மிக்கஉற்சாகத்துடன், சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யலானான். ஜெமீன்களின் அளவு, எல்லை, ஆகியவற்றைக் கண்டறிந்து, எந்தெந்த ஜெமீனில் எவ்வளவு ஏகர்நிலம் சர்க்கார் கைவசமாக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்க ஒரு கமிஷன் நியமித்தான்—அதில் டைபீரியஸ், அவன்தம்பி கேயஸ் கிரேக்கஸ், அவனுடைய மாமனார், அப்பயஸ் கிளாடியஸ் ஆகியோர் அங்கத்தினர்கள். இந்தச் சமயத்தை ஜெமீன்தாரர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர், "பார் இந்த டைபீரியசின் சூழ்ச்சியை! தன் குடும்பத்தினரையே பதவியில் அமர்த்தியிருக்கிறான். அவனுடைய நோக்கம், ஏழைக்கு உதவிசெய்யவேண்டும் என்பதல்ல; எப்படியாவது ஜனங்களைச் சரிப்படுத்திக்கொண்டு, ரோம் நாட்டுக்கு ராஜாவாகவேண்டும் என்பதே அவன் எண்ணம்" என்று தப்புப் பிரசாரம் செய்தனர்—பலரை அவனுக்கு எதிரிடையாகத் தூண்டிவிட்டனர். எங்குபார்த்தாலும், டைபீரியஸ் அரசனாவதற்குச் சூழ்ச்சி செய்கிறான்! என்று கண்டனக்குரல் கிளம்பிற்று. கலகம் மூண்டது. டைபீரியஸ் தாக்கப்பட்டான், அவனுடைய நண்பர்கள் 300-பேர் கொல்லப்பட்டனர்; அவனும் ஒரு கோயில் வாசற்படி அருகே குத்திக் கொல்லப்பட்டான். ரோம் நாட்டு ஜெமீன்தாரர்களின் மனம் குளிர்ந்தது வர இருந்த ஆபத்து ஒழிந்ததே என்ற களிப்பால். மக்களுக்காகப் பணிபுரிய வந்தவன், துவேஷப்பிரசாரத்தால் ஏய்க்கப்பட்ட மக்களாலேயே கொல்லப்பட்டான். ஜெமீனில் கைவைத்தால், இதுதான் நேரிடும்என்று சீமான்கள் எச்சரித்தனர் — மிகிழ்ச்சியுடன், மது அருந்தி, மதோன்மத்தர்களாக வாழத்தொடங்கினர்.

பத்து ஆண்டுகள் கழிந்தன. அண்ணனை ஆதிக்கக்காரரின் வெறிக்குப்பலிகொடுத்த, கேயஸ்கிரேக்கஸ், அதே மக்கள் ஆட்சி மன்றத்தில் ட்ரைப்யூனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். மாண்ட தன் அண்ணனின் திட்டத்தை நிறைவேற்றிவைக்கவேண்டும் என்ற சூளுரை கொண்டான். சட்டம் நிறைவேற்று — ஜெமீன் ஒழிப்புக்கு. மீண்டும் தங்கள் ஆதிக்கத்துக்கு ஆபத்து வருவது கண்ட ஜெமின்தாரர்கள், பதைபதைத்து, இதனையும் தடுத்தாகவேண்டுமே என்பதற்காகச் சூழ்ச்சிகள் வகுத்தனர். மக்கள் ஆட்சிமன்றத்திலே எதிர்ப்பு ஏற்படுத்தினர்—கேயஸ் அந்த எதிர்ப்பை முறியடித்தான். உடனே, வேறோர் சூழ்ச்சி செய்தனர், ட்ரூசஸ் என்றோர் எத்தனைப் பிடித்தனர்; அவனை மக்களிடம் சென்று, கேயஸ்கிரேக்கஸ், செய்வதாகச் சொல்லும் ஜெமீன் ஒழிப்பைவிட, மேலும் தீவிரமான, புரட்சிகரமான காரியங்களைச் செய்யப்போவதாகப் பிரச்சாரம் புரியச்செய்த

னர்—இதன்மூலம், கேயஸ்கிரேக்கஸ், பிரமாதமாக ஒன்றும் செய்பவனல்ல, அவன் அவ்வளவு தீவிரவாதி அல்ல, உண்மையான தீவிரவாதிகள் உள்ளனர், ட்ரூசஸ்போன்றோர் என்ற எண்ணம் பரவிற்று. இதனால் கேயசின் செல்வாக்குக் கரையலாயிற்று. ஜெமீன்தாரர்களின் சூழ்ச்சி பலிக்க ஆரம்பித்தது. 'ட்ரைப்யூன்' தேர்தல் இந்நிலையில் வந்தது. ஒபீமஸ் என்பவன், கேயசை எதிர்த்துத் தேர்தலில் நின்றான்—ஒபீமசுக்குப்பலம் தேடினவர்கள் ஜெமீன்தாரர்களே. தேர்தலில் கேயஸ் தோற்கடிக்கப்பட்டான். தோல்வியுடன் முடியவில்லை கேயசின் துக்ககரமானவாழ்க்கை. வெற்றி பெற்ற வெறியன் ஒபீமஸ் தன்கூலிப்படையுடன் சென்று கேயசையும் அவனை ஆதரிக்கும் நண்பர்களையும் தாக்கி, 5000 பேரைக்கொன்றுகுவித்தான். பத்து ஆண்டுகளுக்குமுன், அண்ணன் கொல்லப்பட்டான்—ஆபத்துத்தனக்கும் வரும் என்பது கேயஸ் கிரேக்கசுக்குத் தெரியும்—தெரிந்தும், எத்தகைய தியாகத்துக்கும் தயாராக இருந்ததாலேயே, அவன், ஜெமீன் ஒழிப்புக் காரியத்தில் துணிந்து இறங்கினான். தேர்தலில் தோற்கடிக்கப் பட்டு, நாட்டு மக்களிலேயே ஒரு சாராரால்பழிக்கப்பட்டு, வரும் நிலைமையை எண்ணிவருந்தினான். தன்னை ஆதரித்தவர்கள் 5000-பேர் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டு மனம் பதறினான்; இனித்தனக்கு ரோம்நகரில் வேலை இல்லை—உலகிலேயே வேலை இல்லை—என்பதை உணர்ந்தான். தியாகத்தீயில் அண்ணனைப் போலவே தானும் இறங்கியாகவேண்டும் – அந்தத்தியாகத்தின் பலனாக, பிறகோர்நாள், மக்கள் விடுதலையும் சுகமும் பெறுவர் என்று உறுதி பிறந்தது. தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தான். கோயிலை அடுத்த ஓர் தோட்டம். அங்கு ஒரு நண்பனை அழைத்துச் சென்று, 'கயவர்கள் கையிலே சிக்கி மடிய விருப்பமில்லை—என்னை உன்கரத்தால் கொன்றுவிடு' என்று கேட்டுக்கொண்டான். எவ்வளவுதடுத்தும் கேயஸ் தன் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளவில்லை. நண்பன், கேயசைக் கொன்றுவிட்டுத் தானும் குத்திக்கொண்டு இறந்தான். கேயஸ், தியாகத்தீயில் குளித்த போது, வயது-38—36-ம் வயதில் அண்ணன், 38-ம்வயதில் தம்பி!

இருவரும் தியாகிகளாயினர், இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பல்ல, ஏசு பிறப்பதற்கு 133 - ஆண்டுகளுக்கு முன்பு. அவ்வளவு பழங்காலத்திலேயே நிலச்சுவான்தார்கள் — ஜெமீன்தார்கள் ஆகியோரை எதிர்க்கத் துணிந்ததுடன், வீரமாகப்போராடித்தம்மைத்தாமே தியாகமும் செய்துகொண்ட இந்த இருசகோதரர்கள், ஜெமீன் ஒழிப்புபற்றிச் சர்வசாதாரணமாக நாமெல்லாம் பேசும் இந்நாட்களிலே, மக்களின் நினைவிற்குக் கொண்டுவரப்பட வேண்டியவர்கள். ஜெமீன்தாரர்களுக்கு இன்றுள்ளது போன்ற நிலைமை அல்ல, இந்த இருசகோதரர்கள் காலத்தில்; அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி காட்டரசர்கள்— அவ்வளவு அதிகாரம். அட்டகாசம் ஆள் அம்பு! அத்தகையவர்களைத், தெளிவு அதிகமில்லாத நாட்களில், மக்களிடை கிளர்ச்சி, கட்டுப்பாடு, ஏற்படாத காலத்தில், பிரச்சார வசதி, சங்க அமைப்பு முதலிய சாதனங்கள் அமையாத காலத்தில், எதிர்க்கத் துணிந்த இரு சகோதரர்களை, மாவீரர்கள் என்றே மதிக்க வேண்டும். மக்களை வசியப்படுத்த ஜெமீன்ஒழிப்புத்திட்டம் போட்டனர் என்று குறை கூறும் பேர்வழிகளும் சிலர்உளர். ஆனால் இன்று நாம் இருக்கும் உலகிலிருந்து இருசகோதரர்கள் இருந்த உலகை, மனக்கண் முன் சித்தரித்துப் பார்த்தால், அவ்வளவு பழங்காலத்திலே, ஏராளமான நிலம் ஒருசிலரிடம் சிக்கிக்கொள்வது, பொது நலனுக்கு, மக்களின் நன்மைக்குக் கேடு விளைவிக்கும் என்ற நோக்கத்தை அவர்கள் கொண்டிருந்ததைக் கவனித்தால், ஆபத்தைப் பொருட்படுத்தாமல் இலட்சியத்துக்காகப் போராடிய வீரத்தைக்கவனித்தால், கடைசியில் அவர்கள் தியாகத்தீயிலே குளித்ததை எண்ணினால், நம்மையும் அறியாது, அந்தத்தியாகிகளின்பொருட்டுக் கண்கசியத்தான் செய்யும். இளம் வயதில் முதிர்ந்த அறிவுள்ளவர்கள் கூடத் துணிந்து கூறாத திட்டத்தை அவ்வளவு பழங்காலத்திலே கூறி, அதற்காகப் போரிட்ட இரு சகோதரர்களின் வீரத்தை, தியாகத்தை நாம் பாராட்டுகிறோம்—அந்தத்தியாகிகளின் உழைப்பின் பயன் வீண் போகவில்லை என்பதறிந்து மகிழ்கிறோம்.

## ரஷியா சிரிக்கிறது

26-ம்பக்கத் தொடர்ச்சி

கிடந்த இயற்கைச் சக்தி, இவ்வளவையும், பயன் படுத்தினர், பலன் குவித்தனர்—அந்தப்பலன் மாளிகையிலே மதுக்கிண்ணமாகவோ, மன்னனின் மணிமுடியாகவோ, குருவின் காணிக்கையாகவோ, சுரண்டுபவனின் போகப் பொருளாகவோ, மாறிவிடாதபடி தடுத்தனர்—மக்கள் உழைத்தனர்—பலனை மக்கள் அனுபவித்தனர், என்ற முறையில், ஆட்சிமுறையை அமைத்துக் கொண்டனர்.

மதவாதியின் கொடுமையை ஒழிக்கச் சில நாடுகளில் புரட்சி நடந்ததுண்டு; மன்னனை எதிர்த்து நடந்ததுண்டு; பிரபுவை எதிர்த்து நடந்ததுண்டு; ஏககாலத்தில் இம் மூன்றையும் எதிர்த்து நடத்தப்பட்ட வெற்றிகரமான ஒப்பற்ற புரட்சி ரஷியாவில் அவர்கள் நடத்திக் காட்டினர். தியாகத்தீயிலே குதித்தெழுந்த தீரர்கள், கவலையில் மூழ்கி, கைகட்டி வாழ்வது, கைகூப்பித் தொழுவது, அல்லது வகையறியாது மோதிமடிவது என்றமுறையில் வாழ்ந்து வதையும் மற்றவர்களைக்கண்டு, ஏன் சிரிக்கமாட்டார்கள்!

சிரி! ரஷியாவே! கைகொட்டிச்சிரி.

மனிதனின் சூதினால் மனிதனின் வாழ்வு மங்கும்போது, மங்கிய வாழ்வு துலங்குவதற்காக, மகேஸ்வரன் கோயில்களிலே மணியோசை கிளம்பக்கண்டு, கைகொட்டிச்சிரி!

சதிகாரர்களைக் கண்டறிய முடியாமல், சாஸ்திரிகளை நாடி அவர்கள் கூறும் 'விதி'க்கதை கேட்டு, வீழ்ந்து வணங்கும் வீணரைக்கண்டு, விலாநோகச்சிரி!

உடைமை சிலரிடமும், உழைப்பு அனைவருக்கும் இருப்பது உலகின் முதல்வன் வகுத்த கட்டளை என்று ஊரிலே பெரியவர்கள் உரைக்கக் கேட்டுச் சிரி, உரத்தகுரலிலேசிரி!

உன் சிரிப்பு, உலகிலே துயில்பவரை எழுப்பும் சக்தி படைத்தது— பாசிசியைப்படைவீரருக்கும் வலிமை அதற்குண்டு—உரிமைக்காகப் போரிடக் கிளப்பும், பேரிகைச் சத்தமாக உன் சிரிப்பு இருக்கிறது. சிரி! ரஷியாவே! சீரழிவைத் தடுக்கமுடியாமல், 'போறிவைநாடி' அலையும் எங்களைக்கண்டு, கைகொட்டிச்சிரி!

★

## மாணவர்களின் மண்டலம்

"கல்வியறிவில்லாத மக்களால் பொதுவுடமை அமைப்பைக் கட்டமுடியாது" என்று லெனின், ஸ்டாலின் இருவரும் வலியுறுத்தினர்.

ஜார் ருஷியாவில் 100க்கு 20 பேர்தான் படித்தவர்கள். சோவியத் ருஷியாவில் 100க்கு 90-க்கு மேல் நன்றாகப் படித்தவர்கள்.

78 லட்சம் ஆரம்பக் கல்விச்சிறுவர்கள் 1913ல். 1940-ல் 3 கோடி 50 லட்சம்.

தொழிற் கல்வியில் 1913-ல் 35 ஆயிரம் பேர். 1940-ல் 9 லட்சத்து 52 ஆயிரம். ஜார் ருஷியாவில் 71 கல்லூரிகள் ஸ்டாலின் ருஷியாவில் 716.

1913-ல் 1 லட்சம் மாணவர்கள் கல்லூரிகளில் படித்தனர், 1940-ல் 7 லட்சம் கல்லூரி மாணவர்கள். குழந்தைப் பாதுகாப்புநிலையங்கள் 1913ல் 9. 1937-ல் 4,384. பராமரிக்கப்பட்டவர்களின் தொகை 44 ஆயிரம் 1913-ல், 1938-ல் 4 கோடி 82 லட்சம்.

குழந்தைகளுக்கான ஆரம்ப கிண்டர் கார்டன் (குழந்தைகளின் தோட்டம்) பள்ளிகள் ஜார் ருஷியாவில் கிடையாது, 1927 ஐந்தாண்டுத் திட்டத்து ஆரம்பத்தில் 1 லட்சம் குழந்தைகள் கிண்டர் கார்டன் பள்ளிகளில் இருந்தனர். 1936-ல் 10 லட்சம்.

விளையாட்டு மைதானங்கள் ஜார் ருஷியாவில் பாதுகாக்கப்படவில்லை. வசதியான மைதானங்கள் சோவியத் ஆட்சியில்தான் உண்டாக்கப்பட்டன. 1927-ல் 1 லட்சம் சிறுவர்களுக்கு விளையாட்டு வசதிகள் கொடுக்கப்பட்டன. ஐந்தாண்டு திட்டங்களுக்குப்பால் 1936-ல் 32 லட்சம் சிறுவர்களுக்கு விளையாட்டு இடங்கள் கிடைத்தது. நாம் குறிப்பிடுவது வயது வராத சிறுவர்களுக்கு மட்டும் உபயோகப்படும் விளையாட்டிடங்கள்.

வசதியும் வளமையும் அதிகமுடைய இங்கிலாந்தில் அரசாங்கம் 1931 கணக்குப்படி தலைக்கு 27 ரூபாய்கள் செலவு செய்தது, சோவியத் நாட்டில் பொருளாதார நெருக்கடியில் மிகக் கஷ்டப்பட்டதால் $13\frac{1}{2}$ ரூபாய்தான் செலவு செய்ய முடிந்தது, 1941-ல் நிலைமை மாறிவிட்டது. இங்கிலாந்து 30 ரூபாய்தான் தலைக்குச் செலவு செய்தது. சோவியத் நாடு 111 ரூபாய்கள் தலைக்குச் செலவு செய்தது.

மாணவர்களின் மண்டலமாகச் சோவியத் விளங்குகிறது.

## மலிந்துனேன்

29-ம் பக்கத் தொடர்ச்சி

"டேய்! அடடா! இவனும் அதேதான்"

இப்படி நாலைந்து சீமான்கள் கூவினர்—அன்று கடுமையான பனி—ஐந்துவண்டிக்காரர்கள் பிணமானார்கள், அவர்களின் எஜமானர்கள் விருந்து வேடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது. என்மனதில் மின்னல் வேகத்தில், ஓர் தாக்குதல்! நமக்காக அல்லவா இவன் இங்கு இருந்தான்—பனியால் இறந்தானே—பழிக்குயார் பொறுப்பு—நானல்லவா—பிரபுவின் வாழ்வு எப்படி இருக்கிறது—ஏழையின் பிணம் கீழே விழுந்திருக்கிறதே! உள்ளே பிரபு மது மயக்கத்தில் இருக்கும்போது. இது முறையா? என்று எண்ணினேன்—மனம் குழம்பிற்று. விருந்தளித்த இலட்சாதிகாரியோ, பிணங்களைக்கூடக் கவனிக்கவில்லை—எங்கள் வண்டிகளை ஓட்டிச் செல்ல வேறு ஆட்களை அமர்த்தும் வேலையிலே மும்முரமானார். பிணங்களைப் பற்றிக் கவலை வேண்டாம்—நான் புதைக்க ஏற்பாடு செய்து விடுகிறேன் என்று கூறினான். ஆம்! நண்பர்களே! என்வண்டி புறப்பட்டது, வேறோர் ஆள் ஓட்டுவதற்குக் கிடைத்தான். என்னை அழைத்துப் போக வண்டி கொண்டுவந்தவாசியா, எந்த மாளிகையிலே நான் காமக்கூத்தாடி இரவைக்கழித்தேனோ, அந்த மாளிகைக்கு எதிரே பிணமாகிக் கிடந்தான். வண்டி ஓடலாயிற்று—என்மனம் சுடலையாயிற்று—தலை சுழன்றது—என்ன வாழ்க்கை! என்ன அக்ரமம்! அடுக்குமா! என்று கேள்விகள் மனதிலே கொப்பளித்தன.

வண்டி நின்றது—நடுப்பாதையில்.

"பாதையிலே யாரோ கிடக்கிறார்கள்" என்றான் வண்டியோட்டி.

மனதுக்கு மற்றோர் சவுக்கடி! குதித்தேன் வண்டியை விட்டு—பாதைநடுவே ஓர் உருவம் கிடந்தது—பாதிப்பிராணன் போன நிலைமை—ஈனக்குரலில் ஏதோ கூவிக்கொண்டு. அருகே சென்றேன், ஒரு பெண் — விறைத்துக்கிடந்தாள்—நானும் வண்டியோட்டியுமாகச் சேர்ந்து, சூடு பிறப்பதற்குத் தைலம்தடவி, அவளுடைய கால்கைகளில் தேய்த்தோம்—அவளை வண்டியில் கிடத்தலாமென்றெண்ணித் தூக்கினோம்—நண்பர்களே! அப்போது தான் அவள் பக்கத்தில் சிசு—அப்போது தான் பிறந்தகுழந்தை—கிடக்கக்கண்டேன்—அது பனிவாடையால் பிணமாகிக்கிடந்தது. இது ரஷியநகரின் நடுப்பாதையில்! நானோ அந்தநேரம்வரை, குடித்துக் கூத்தாடிவிட்டு வருகிறேன்; என் பாதையிலே பிணம்! அங்கு என் வேலையாளின்பிணம் — இங்கோர் அபலையின் அன்று பிறந்த குழந்தையின் கோரமரணம்—அவளுக்கும் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலைமை. இவ்வளவு கோரத்துக்கு மத்தியில், நரகத்தின்நடுவே நாங்கள்! அழிவின் நடுவே, கேளிக்கை! பாதையில் பிணம், பாதிராத்திரியில் நாட்டியக்கச்சேரி! இதென்ன கோரம்! நாட்டிலே இப்படியா இருக்கவேண்டும்! அதோ பிணம்! இதோபிணம்! அவளும் பிணமாவாளோ! பயந்தேன்—மனதிலே ஒரே வேதனை—"ஓட்டு வண்டியை வேகமாக ஒருவைத்தியன் வீட்டுக்கு" என்றேன்—ஐந்தாவது மைலில்தான் ஒரு வைத்தியன் இருந்தான்—அங்கு அவளைக்கிடத்தினோம்—மருந்தளித்தோம் — அவளை அங்குதான் நான் சரியாகப் பார்த்தேன்—நண்பர்களே! அவளும் என்னைப்பார்த்தாள். அந்தப் பார்வையை நான் என்னென்பேன்! அவள், என் பொழுது போக்குக்காலத்துக்குப் பலியான பலபெண்களிலே ஒருவள்! எங்கள் பண்ணைக்கூலிதான்!

"நீயா?"—நான் கேட்டேன்.

"என்பிரபுவா?" அவள் பேசினாள் ஈனக்குரலில்.

பிரபு! பிணமாகக்கீழே மக்கள் வீழ்வதற்குக் காரணமாக இருக்கும் பேய்! "என்பிரபு" என்றாள் அந்த அபலை—அவளைக் கெடுத்த என்னை.

அவள் புருஷன், பட்டாளத்துச்சிப்பாய்—காகசஸ்சண்டையிலே அவனும் வந்திருந்தான் — எனக்குப்புகழ் — அவனுக்குப் புண்—நோய்—கடுமையான ஜுரமாம், வைத்தியரைப்பார்த்து ஏதாவது மருந்து

25-ம் பக்கம் பார்க்க

## மனிதனானேன்

24-ம் பக்கத் தொடர்ச்சி

வாங்கி வருவதற்குத்தான் அவள் புறப்பட்டாள். இரவு நேரம்— அவளுக்குப் பிரசவ காலம்—கணவன் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையால். இருள், பனி, எதையும் சட்டை செய்யாது வந்தாள். எங்கோ ஓநாய்கள் கூவுஞ்சத்தம் கேட்டதாம்—என்ன செய்வாள் அபலை—ஓடினாள்—வழிதவறிவிட்டாள்—மயக்க முற்றுக்கீழே வீழ்ந்தாள்— நான் தூக்கிவண்டியில் வைக்கும்வரை அவளுக்குத் தெரியாது, தான், தாயானவிஷயம்.

அவள் தன் கதையைக் கூறினாள்— நான்புது மனிதனானேன். புதுமனிதனானேன் என்று கூடக்கூற வேண்டியதில்லை, நண்பர்களே! நான் அதுவரை பிரபுவாக இருந்தேன்—அன்று மனிதனாகமாறினேன்! இனி இந்தவாழ்க்கையில்ஈடுபடக்கூடாது— ஏழை எளியோருக்குப் பாடுபடவேண்டும்—அவர்கள் பாதையிலே பிணமாக வீழ்வதைப்பார்த்துக் கொண்டிருக்கும் கன்னெஞ்சம் கொண்டவர்கள் ரஷியாவில் இருக்குமட்டும், ரஷியாவாழாது, மனிதத்தன்மை நிலைக்காது என்றெல்லாம் எண்ணினேன், கொதித்தது மனம்—பலப்பல யோசனைகள்—எத்தனையோ கேள்விகள் மனதில்.

பெரும்பாலான ரஷியர்கள் ஏழ்மையிலும் அறியாமையிலும் மூழ்கிக்கிடக்கிறார்கள்—அவர்களைக் கடைத்தேறச்செய்ய வேண்டும். எப்படி?

ஏன், அவர்கள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறார்கள்? ஏழ்மை! படிக்க வசதி இல்லை!

ஏன் ஏழ்மை? அவர்கள் அறியாமையுள்ளவர்கள், பிழைக்கும் வழிதெரிவதில்லை!

இதென்ன விசித்திரச் சங்கிலி! ஏழ்மை அறியாமை—ஒன்றுக்கு மற்றொன்றுதாய்—ஒன்றுக்கு மற்றொன்று குழந்தையுமாகிறது.

என் தலை சுழன்றது, இந்தப் பிரச்னையைப் பற்றியோசிக்கத் தொடங்கியதும். மாளிகையிலே உட்கார்ந்திருந்தாலும், மண்குடிசைதான் என்மனக்கண்முன் தோன்றலாயிற்று—மதுக்கிண்ணத்தின்மீது பார்வை செல்ல மறுத்தது—நான்பிரபுவாக இருக்க முடியவில்லை — என்னை உண்மைரஷியா, சேவை செய்யவருமாறு கூவியழைத்தது. கிளம்பினேன். ஏழைகளின் வீடுகள் சென்றேன் —அவர்களோடு உரையாடலானேன்—குறைகள் கோடிகோடியாகக் குவிந்திருக்கக்கண்டேன்—என்னால் ஆன உதவி செய்வதென்று தீர்மானித்தேன்.

என்னையொத்த பிரபுக்கள், என்புதிய போக்கைக் கண்டு கேலி செய்யலாயினர் —இதென்ன பித்தம் என்றனர்—எனக்கு அவர்கள் பேச்சுக்காதில் விழவில்லை.

இந்த ஏழைகளே, ரஷியாவில் உழைப்பவர்கள் — உழைப்பதோடு வரி ஏராளமாகக் கட்டுபவர்கள்— பிரபுக்களுக்குவரி கிடையாது—எப்போதும் ஜாரின் கருணை கடாட்சம் இருக்கும்!

நான் இந்த ஏழைகளுக்கு உதவிசெய்யலானேன்—ஆங்காங்கு சிறுசிறு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினேன், அந்தமக்களின் தற்குறித்தனத்தைப்போக்குவதற்கு. "இவர்கள் படிப்பதா! படித்தால்வேலை செய்ய மாட்டார்களே! கேள்விகேட்க ஆரம்பிப்பார்களே! என்ன காரியமப்பா செய்கிறாய்? ஏழையைப்படிக்கவைக்கிறாயே! அது நமது நிலைக்கு அல்லவா ஆபத்து, வெடிமருந்துச்சாலை அருகே தீக்குச்சியைக்கொளுத்தலாமா?" என்று எனக்குப் புத்திகூறப் புறப்பட்டார்கள் பிரபுக்கள். நான் சட்டைசெய்யவில்லை. நான் உண்மை ரஷியாவுக்கு ஊழியனாகிவிட்டேன்.

இந்தச்சமயத்திலேதான், எனக்கு ஜார் மன்னனிடம் நெருங்கிப்பழகும் உத்தியோகம் கிடைத்தது. நான் இந்தச் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திக்கொள்ளலாமென்று கருதி மக்களின் நிலைமையைமாற்றி அமைக்கவேண்டிய தன் அவசியத்தை நாசுக்காகக்கூறினேன். மந்தகாசமான சிரிப்புடன் பேசலானார், 'பிரபுவே! இரண்டே முறைகள்தான் உள்ளன லகயாள்வதற்கு. ஒன்று நாம்மக்களை

26-ம் பக்கம் பார்க்க

## மனிதனானேன்

25-ம்பக்கத் தொடர்ச்சி

ஆள்வது; மற்றொன்று மக்கள் நம்மைஆள்வது. நீர்சொல்லும் முறையின்படிகாரியம் செய்தால் மக்கள் நம்மைஆளத்தொடங்குவர்—மாளிகையும் இராது, அரண்மனையும் இராது!'' என்றார். ஜாரின் மனம் எனக்குத் தெரிந்துவிட்டது—என்னையும் அவர் நன்கு தெரிந்துகொண்டார்.

சில நாட்களில், நான் புரட்சி இயக்கத்தைச்சேர்ந்தவன் என்று கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, ஆயுள் தண்டனை தரப்பட்டது. சைபீரியா சிறைக்கு அனுப்பப்பட்டேன்.

அது சிறை அல்ல—எனக்கு அதுதான் ஞானோதயஸ்தலம்! ஏனெனில் அங்கு இருந்த இரண்டாண்டுகளும் நான் விரிவாகப்படித்ததன் பலனாகவே, என் பொது அறிவு விருத்தியடைந்து, புதியரஷியா ஏற்பட்டாகவேண்டும் என்ற உறுதி பலப்பட்டு, நான் உண்மையிலேயே புரட்சிஇயக்கத்தினனாக மாறினேன். கிழவிபோலமாறு வேஷம் போட்டுக்கொண்டு, ரயிலேறி, பிறகு விளாடிவாஸ்டாக்கிலிருந்து ஒரு ஜப்பானியக் கப்பலில் பிரயாணம்செய்து, நாகாஸ்கி சென்று, பிறகு அமெரிக்காவில் இருந்துவிட்டு, இங்கு வந்து சேர்ந்தேன். இதுவே, பிரபுவாகப் பிறந்த நான் புரட்சி இயக்கத்தினனாக மாறியகதை. நான்மட்டுமல்ல, உண்மை ரஷியாவின் நிலைமையை ஏழ்மையை, கொடுமையை நேரடியாகக் கண்டால், எவருக்கும் இருதயம் துடிக்கும், அந்தத்துடிப்பு பிரபுவைக் கொல்லும் —பிரபு இறந்ததும் மனிதன் பிறப்பான்—மனிதனை—மனிதத்தன்மைக்காகப்போராடுபவனை, மனிதருக்காக வாதாடுபவனை, மிருகநீதி, மிருகஇச்சை, மிருகவாழ்க்கை கொண்டுள்ள ஜாரின் ரஷியா, புரட்சிக்காரன் என்றுதானே கூறமுடியும். ஜார், என்னைப்புரட்சிக்காரன் என்று குற்றம் சாட்டுகிறார்—நான், மனிதனானேன் என்று கூறிக்கொள்கிறேன்—இதுவே என் கதை'' என்று கூறிப் பிரபு கதையை முடித்தார்.

## ரஷியா சிரிக்கிறது

27-ம் பக்கத் தொடர்ச்சி

கில் பூட்டப்பட்ட மாடுகளென, யாருக்காகவோ தேய்ந்தபாதையிலே, சுற்றிக்கொண்டிருக்கும் மக்களைக்கண்டு, சிரிக்கிறார்கள்.

அவர்கள் வீரர்கள்! உலகிலே, மிகக்கொடுமை வாய்ந்த ஆட்சியைக் கவிழ்த்தவர்கள். கவிழ்த்ததோடு திருப்தி அடையவுமில்லை, புதிய எஜமானருக்குப் பாதபூஜை செய்துகொண்டும் இல்லை—சமுதாயத்தைப் புதுப்பித்தனர்.

நவம்பர் புரட்சி நடத்திய மக்கள், ஒரே அடியில் மத ஆதிக்கம், சமுதாயத்தில் பேதம் உண்டாக்கும் ஆதிக்கம், ராணுவத்தின் ஆதிக்கம், ரஸ்புடீனின் ஆதிக்கம், ஜாரின் ஆதிக்கம், பிரபுக்களின் ஆதிக்கம், ஆகிய அனைத்தையும் அழித்துப் புதுவாழ்வு பெற்றவர்கள்.

கோழைகள், வீரர்கள் ஆனநாள்! அடிமைகள், விடுதலை பெற்ற நாள்! ரஷியா, சோவியத்நாடு ஆனநாள். வெள்ளை, சிகப்பானநாள்! புரட்சி நாள், நவம்பர் 7!

மகத்தான வெற்றி அந்தமக்களுக்கு.

வறண்ட வாழ்க்கையிலே, வளம் வந்து சேர்ந்தது—பாலைவனத்தைப் பூந்தோட்டமாக்கினர். ஆட்சி, ஜாரிடமிருந்து பறிக்கப்பட்டது மட்டுமல்ல, ஜார்கொல்லப்பட்டது மட்டுமல்ல, அரசர் ஆள்வது என்ற முறையே மாறிவிட்டது என்பது மட்டுமல்ல, ஆட்சிமக்களிடம், நாடு மக்களிடம், நாட்டுச் செல்வம்மக்களிடம், சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்றவசதி, இல்லாமை போதாமை எனும் இழுக்கு அற்றநிலைமை, வீணர், வறியர், என்றவர்க்க வேற்றுமை ஒழிந்த சமுதாய அமைப்பு, இதனைச் சாதித்தனர். ஒப்பற்ற புரட்சி அது.

அடிமைத்தனம் ஒழிந்தது மட்டுமல்ல, அதன் விசேஷம், அதுவரை எங்கோ மறைந்துகிடந்த, மங்கிக்கிடந்த ஆற்றலும் அறிவும், ஆண்மையும், மக்களிடமிருந்து கிளம்பி, ரஷிய நாட்டை, பதினைந்து ஆண்டுகளில், ஒரு நூற்றாண்டுகாலம் வேலைசெய்தால்கூட அடையமுடியாத முற்போக்கான நிலைக்குக்கொண்டுவந்துவிட்டனர்.

தோண்டுவாரற்றுக் கிடந்த நிலக்கரியை மலைமலையாகக் குவித்தனர், உருக்குவாரற்றுக் கிடந்த எஃகு, உழுவாரற்றுக் கிடந்த வயல், தேடுவாரற்றுக்கிடந்த கனிப்பொருள்கள், ஏவுவார் அற்றுக்

23-ம் பக்கம் பார்க்க

# ரஷ்யா சிரிக்கிறது!

அன்புள்ள அமெரிக்க நண்பர்களே! என்னை ரஷியப்பித்துப் பிடித்தவன் என்றுகூறிக் கொண்டுதிரியும் மேதாவிகளே!!

ரஷ்யா நம்மைப்பார்த்துச் சிரிக்கிறது, தெரிந்துகொள்ளுங்கள்.

ரஷ்யா, நம்மைஎல்லாம் முட்டாள்களாக்கி விட்டது.

அதுமிகமிக முன்னேறிவிட்டது; நாம் பின்தங்கிவிட்டோம்.

நமது நிலையைக்கண்டு நாமே வெட்கமடைந்து தலைகுனிந்து கொள்ளும்படி ஏற்பட்டுவிட்டது.

நமதுவண்டவாளங்களை ரஷியாஉலகமறியச் செய்து விட்டது.

உலகத்தில் நம்மைவிட ஒழுக்கத்தில்சிறந்தவர்கள் கிடையாது என்று மலைஉச்சியில் ஏறி ரஷ்யாவுக்கு உபதேசம் செய்துவந்தோம்,

அந்தக்காலம் மலைஏறிவிட்டது. இன்று, ரஷியாவைக்கண்டு, நாம் பதுங்கவேண்டி நேரிட்டுவிட்டது, வெட்கத்துடன்.

**பெர்னாட்ஷா,** பல ஆண்டுகளுக்குமுன்பு அமெரிக்கரைப் பார்த்துக்கூறினார் இதுபோல; அமெரிக்காவுக்கு மட்டுமென்ன, அகில உலகுக்கும் கூறவேண்டிய வாசகந்தான். ஆம்! ரஷ்யா, நம்மைஎல்லாம் பார்த்துச் சிரிக்கத்தான் செய்கிறது. சிரிக்காமல் எப்படி இருக்கமுடியும்!

கண் இருந்தும் குழியில்விழ வேகமாகச்செல்பவனைக்கண்டால், கைகொட்டிச் சிரிக்கமாட்டோமா? கனி இருக்கக் காயைத்தேடித்திரிபவனைக்கண்டு கேலிபேசாதிருப்போமா? வெண்ணெயை ஒருவன் பறித்துக்கொண்டுபோக இடங்கொடுத்துவிட்டு, நெய் தரும்படி வேறோர்இடத்திலே நின்று கெஞ்சுபவனைக்கண்டால் சிரிப்பு வாராமலிருக்குமா!

ரஷ்யா, சிரிப்பது இம்முறையிலேதான்.

மனிதனை மனிதன், சாமர்த்தியத்தின் பேரால் சுரண்டுவதையும், சுரண்டப்படுபவன், சூட்சமத்தைத் தெரிந்து கொள்ளாமலிருப்பதையும் கண்டு ரஷ்யா சிரிக்கிறது. ஏனெனில், அங்கு, சுரண்டல் தொழில் ஒழிந்துவிட்டது.

ஒழித்து விட்டோம், வாழ்வை மீண்டும்பெற்றோம் அதனை எடுத்து உலகுக்குத் தெரிவித்து விட்டோம், எனினும், இன்னும் அங்கெல்லாம், சுரண்டல்வேலை நடக்கிறதே என்பதைக்கண்டு, இப்படியும் மனிதர்கள் உள்ளனரே, என்று ரஷ்யா சிரிக்கிறது.

பெர்னாட்ஷா 'பிறிதோரிடத்தில் கூறுவது போல, "சிறைக்குள் இருக்கும் ஒருகைதி, அதன் கதவுகள் திறந்து கிடப்பதை அறியாமல், சிறையிலுள்ள ஜன்னல் கம்பிகளை, நகத்துண்டுகளால் அறுத்து, வெளிவர முயற்சித்துக் கொண்டிருப்பது போன்ற முயற்சி" யில், நாமெல்லாம் ஈடுபட்டிருப்பதைக் காணும்போது ரஷ்யா, சிரிக்காமல் என்ன செய்யும்.

ஜாரின் கொடுங்கோன்மை, ஜெமீன்தார்களின் அட்டகாசம், கனவான்களின் காமாந்தகாரம், குருமார்களின் ஆதிக்கம் ரசபுடீனின் கபடம், வறுமை, அறியாமை, பிணி, பீதி, முதலிய எண்ணற்ற தளைகள் அந்தமக்களைப் பிணித்து வாட்டிவதைத்தன—உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது — ஒருமுயற்சி—ஒருபலமான முயற்சி—ஆம்!—உயிரைப் பற்றியபயமற்று, கொள்கையைப் பற்றிய உறுதியுடன் இலட்சிய பூமியைக்காண வேண்டுமென்ற ஆர்வத்துடன், அந்த வீரர்கள்—வீரர்கள்கூட அல்ல அப்போது—வீழ்ச்சியுற்றுக் கிடந்த அந்தரஷ்யமக்கள்—வீறுகொண்டு எழுந்தனர்-அடக்க; அழிக்கவந்த படைவரிசையைப் பிளந்தனர், கொடுமைக் கோட்டைகளைத் தூளாக்கினர்—தளைகள் பொடி பொடியாயின—விடுதலை கிடைத்தது— ஒரேமுயற்சியில்—பலதலைமுறைகளாக வதைத்து வந்த கொடுமையை அழித்தொழித்தனர்—புதியதோர் உலகு செய்தனர்—எனவேதான் அந்தரஷியமக்கள் சிந்தனைக்கும் செயலற்றுக் கிடக்கும் மக்களைக்கண்டு, 'செத்தவாழ்வு' நடாத்தும் மக்களைக்கண்டு, செக்

26-ம் பக்கம் பார்க்க

## மனிதனானேன்

7-ம் பக்கத் தொடர்ச்சி

கிறார்களோ, யாருக்கு நடுநிசி நண்பர்கள் அதிகமோ, யாரால் அதிகமாகக் குடித்து உருள முடிகிறதோ அந்த மாணவனுக்குத் தான் அதிக மதிப்பு—ஏனெனில் அந்த வாழ்க்கைதான் அவனுடைய பிரபுத்துவத்தை விளக்கும் வழியாகக் கருதப்பட்டது. நான் மற்றவர்களைப்போலவே, அந்தக் கேளிக்கையில் ஈடுபட்டேன்—ஆடினேன்—பாடினேன்—ஆரணங்குகளைச்சீரழித்தேன்—அசம்பாவத்தைக் கற்றுக்கொண்டேன்—சீமான்பதவிக்கு இலாயக்குடையவனானேன். விடுமுறைக் காலத்திலே வீடுவருவேன்—பாடம்மட்டும் படிக்காமல் இருக்கமாட்டேன்—என்னபாடம்? கேளிக்கை தானே எங்கள் முக்கியபாடம்! அதற்குக் கிராமத்துக்கட்டழகிகள்—எங்கள் பண்ணையில் உள்ள பாவையர்—கிடைத்தவள்-எவள் "முடியாது" என்று கூறமுடியும்? நான் சீமானின் மகன்—அவள் கூலிக்காரன் மகள்! மனைவியாகக்கூட இருப்பாள்! மாளிகைக்குக் குடிசை இந்த உபகாரம்கூடச் செய்யாவிட்டால்!! என் வீட்டாருக்கும் என் 'கன்னிவேட்டை' தெரியும். தெரிந்தாலென்ன! வாலிபன், விளையாடிக்கொண்டுதான் இருப்பான்! இது சகஜந்தானே என்றனர். என்ன விளையாட்டு? விபசாரப் பண்ணை வைப்பது! இதனைச்சீமான் உலகம் அனுமதித்தது.

எனக்கு வயது பதினெட்டு, பட்டாளத்திலே பதவி கிடைக்கும்போது அதே சமயம் காகசஸ் சண்டை மூண்டது. நான் அதிலே ஈடுபட்டேன். எத்தனையோ கிராமங்களைக் கொளுத்தினேன்! கொலை, பல! போரல்லவா? வேறே என்ன இருக்கிறது செய்வதற்கு!

போர் முடிந்து வீடு திரும்பினேன்—ஊரே ஆச்சரியப்பட்டது—என் வீரத்தைக் கண்டல்ல—நான் யுத்தக் கைதிகளாகக் கொண்டுவந்த அழகிய இரண்டு காகசஸ் நாட்டுக் கன்னியரைக் கண்டு! அவர்களுக்குத்தனி விடுதி அமைத்தேன். என்பொழுது போக்குக்கு அந்த உல்லாசக்கூடம்! ஊர் அறியும், வீட்டாருக்கும் தெரியும். தடுப்பார் யார்? நானே சீமான் மகன்—எத்தனையோ சீமான்கள் செய்கிறகாரியத்தைத் தானே செய்கிறேன்; அழகிகள் கிடைத்தால் அவர்களை அலையவிட்டு விடுவதா! காகசஸ்நாட்டுக் காரிகையர் இருவரும் என் களியாட்டத்துக்கு மிகவும் பயன்பட்டனர்—ஆனால் பாவம் மலைப்பிரதேசத்தில், பனிச்சாரலில் வளர்ந்த பெண்களல்லவா—எங்கள் ஊர் பருவநிலைபிடிக்கவில்லை, மெலிந்துபோனார்கள்-கொஞ்சகாலத்திலே மடிந்தனர்.

என் தகப்பனாருக்குப் பட்டாளத்திலே அந்தச்சமயத்தில் ஜெனரல் உத்தியோகம்; அவரும் காகசஸ் சண்டையில் ஈடுபட்டிருந்தார். ஜார் மனமுவந்து, எங்கள் யுத்த சேவையைப் பாராட்டி, காகசஸ் பகுதியிலே பெரியஜெமீனை இனாமளித்தார்.

பிறகு, போலந்திலே, சிலர் புரட்சிநடத்தினார்கள்—அங்கு சென்றேன் ஒரு படையுடன். பிடி! சுடு! வெட்டு! கொல்லு! என்று உத்தரவிட்டேன். புகழ் கிடைத்தது! வீடு திரும்பினேன், பழையபடி கேளிக்கையில் மூழ்க.

இந்தச் சமயங்களிலெல்லாம், எனக்கு இந்த வாழ்க்கை சரியல்ல என்றோ, காமக்கூத்தாடுவது அக்ரமம் என்றோ எண்ணம் உண்டானதே இல்லை. எப்படி உண்டாக முடியும்? ரஷியநாட்டிலே ஒவ்வொருமாளிகையிலும் இப்படி நடக்கக் கண்டேன்—அந்தப்பிரபுக்கள் புடைசூழத்தான் எமது ஜார் ஆட்சி புரிந்துவந்தார்.

போரில் புகழ்பெற்ற எனக்கு விருந்தளிக்க ஒரு இலட்சாதிகாரி எண்ணம் கொண்டான். அவன் பரம்பரைப்பிரபு அல்ல, ஆகவே விருந்து நடத்த நாங்கள் அனுமதித்ததையே அவன்பெரிய கௌரவமாகக்கருதினான். சீமான்கள் பலர் வந்தனர்—சிங்காரிகள் ஏராளம்—பானவகை ஆறுபோல்—கீதம் கொந்தளித்தது—ஒரே கேளிக்கைமயம். ரஷியாவிலேபுகழ்பெற்ற நாட்டியக்காரி தருவிக்கப்பட்டிருந்தாள், ரசமான நாட்டிய விருந்தளிக்க. அந்தச் சமயத்திலே ரஷியா எங்கும் அவளைப்பற்றியேதான் பேச்சு. நீங்கள் அந்த நடனத்

29-ம் பக்கம் பார்க்க

## மனிதனானேன்

28-ம் பக்கத் தொடர்ச்சி

தைக்கேவலம் காமக்கூத்து என்று சொல்வீர்கள்—அக்ரமம் என்று கண்டிப்பீர்கள்—எங்கள் சீமான்கள் அந்த நடனத்தைக் கண்டபோதுமட்டுமல்ல, பிறர் அதன் பெருமையைக்கூறக்கேட்கும்போது கூட ஆனந்தமடைந்தனர். நானும் அந்தநடனத்தைப்பற்றிக்கேள்விப்பட்டிருந்தேன்-அது வரை பார்த்ததில்லை—அன்றுதான் பார்த்தேன்.

விருந்து முடிந்தபிறகு, வேலையாள், 'பிரபுக்களே! இதோ கனி வருகிறது-உண்டு களியுங்கள்' என்றான். விருந்தின்முடிவிலே பழவகை சாப்பிடுவோமல்லவா, அந்த முறைப்படி. திரைவிலகிற்று—கீதம் ஒலித்தது-தகதகவென்ற பிரகாசத்துடன்விளங்கிய தங்கத்தட்டு, அதன்மீது அந்தப்பிரபல நாட்டியக்காரி—முழுநிர்வாணம்! அவளைச் சுற்றிப் பழவகைகள்!! நாங்கள் ஆரவாரம் செய்தோம் ஆனந்தத்தால். கனி! கன்னியைச்சுற்றி! தங்கத்தகடு! அதன்மீது தையல்! நடுநிசி—காமப்பசி—அந்த நங்கை. அன்றிரவு, வந்திருந்த சீமான்கள், ஆடிய காமக்கூத்துத்தான், என்பிரபுவாழ்க்கையின் கடைசிப்படிக்கட்டு—அந்த உச்சியில்ஏறிய பிறகுதான், எப்படிப்பட்ட படுகுழி கீழே இருக்கிறது என்பதை உணரமுடிந்தது. விருந்து மண்டபத்திலே அல்ல எனக்கு இந்த எண்ணம் உண்டானது—அங்கு ஒரே எண்ணம்—ஒரே செயல்—அனைவருக்கும்—மது, மங்கை—மாறி மாறியும் ஒருசேரவும்—மதுதரும் மங்கை— மது உண்டமங்கை—மதுவான மங்கை — இப்படிப்பல நிலை—ஆனால் ஒரே மிருக நிலைமை—மிருகநிலைமை என்று இன்று கூறுகிறேன்—அன்று அதுதான் நாகரிக நிலைமை-பிரபுவின்பிறப்புரிமை என்றுதான்எண்ணினேன். நடுநிசிகழிந்தது, விடியும்வேளை! அன்று என் வாழ்விலே கப்பிக்கொண்டிருந்த இருள் ஒழியப்போகிறது—நல்லறிவு உதயமாகப் போகிறது என்று மாளிகையினுள்ளே இருக்கும்வரை எனக்குத்தெரியாது. சிரிப்பு—அணைப்பு—முத்தம்—ஆனந்தச்சத்தம்—இவ்வளவு இருக்கும் போது, வேறுநினைப்பு வரமுடியுமா! வரவில்லை.

எங்கள்வண்டிகளை விடியற்காலைமணிக்கே தயாராகமாளிகைவாயற்படியில்காத்திருக்கச்சொன்னோம். என்னிடம் விடைபெற்றுக் கொண்டு பல சீமான்கள்போய்விட்டனர். நான் கொஞ்சம் சாவதானமாகவே அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டேன். எனக்கு விருந்தளித்த இலட்சாதிகாரியின் மனைவி, நல்ல அழகி!

வெளியே வந்தேன், விருந்தளித்தவனுடன்.

"வாசியா! டே! வாசியா!" என்று கூப்பிட்டேன், வண்டிக்காரனை. சத்தம் இல்லை, வண்டிமட்டும் நின்றுகொண்டிருந்தது. "டே, வாசியா!"—கொஞ்சம் உரத்த குரலில் கூவினேன்.

"பயல்கள் இப்படித்தான் — வண்டியில் உட்கார்ந்தபடியே தூங்கித் தொலைக்கின்றன. டேய், வாசியா!' என்று எனக்கு உதவியாக, இலட்சாதிகாரியும் கூப்பிட்டார். வாசியா பதிலே சொல்லவில்லை. வண்டி அருகே போனேன்—பயல் வண்டியிலே உட்கார்ந்தபடி பேச்சு மூச்சற்றுக் கிடக்கிறான். "கழுதை! வெறிக்கக்குடித்துவிட்டான்" என்றார் இலட்சாதிகாரி.

"நம்புவதற்கில்லையே! இவன் குடிக்கும் வாடிக்கையே கிடையாதே." என்றுகூறிக் கொண்டே அருகேபோய், வாசியாவைப் பிடித்துக்குலுக்கினேன் — நண்பர்களே! அவன் பிணமாகிக்கிடந்தான்! கடுமையான பனி பெய்கிறது—அவன் விடியற்காலைநாலு மணிக்கு வந்தான்— இரண்டுமணி நேரம்—குளிரில் — பனியில் — இருந்திருக்கிறான், உள்ளே கூத்தடித்துக்கொண்டிருக்கும் என் வரவுக்காக. பனி பெய்து பெய்து, அவனை வாட்டி விறைக்கச் செய்துவிட்டது-பிணமானான்! காமச்சேற்றிலே நான் புரண்டுகொண்டிருந்தேன், என்பணியாள் ஏழை, வெளியே, பனியால் சாகடிக்கப் பட்டிருக்கிறான்; அவனும் ரஷியனே!

"என் வண்டிக்காரப் பயல்கூடச் செத்துக்கிடக்கிறானே!"

"அடடே! நம்ம நடிபயனுங்கூடத் தான்!"

24-ம் பக்கம் பார்க்க

## புதுவாழ்வு

8-ம் பக்கத் தொடர்ச்சி

"பச்சையும் சிகப்பும் அழகாக இருக்குமா? நீலமும் சிகப்பும் பொருந்துமா? கோடு போட்டால் நன்றாக இருக்குமா? கோலம்போட்டால் அழகாக இருக்குமா? கிருஷ்ணன் சிலை வைக்கலாமா, ராமன் சிலை வைக்கலாமா? கைப்பிடிச் சுவரிலே இரண்டு கோடியிலும், பொம்மைகள் வைத்தால் அழகாக இருக்குமா, பூந்தொட்டிகள் வைத்தால் அழகா?" என்று தன்புது விட்டுமூன்றும் மாடியில், உலவிக்கொண்டு, கட்டட அலங்காரவேலைக்காரனிடம் பேசுகிறார் 'கந்துவட்டி' வரதப்பா.

"ராத்திரி மழைக்கு, புறக்கடைச் சுவர் இடிந்து விட்டது. கீழே சாய்ந்துவிடாதிருக்க, சவுக்குக் காலை முட்டுக் கொடுத்தேன்; பாரம் தாங்க முடியவில்லை; கால் முறியத் தொடங்கிற்று; பயந்து, அதை நிமிர்த்தினேன், இதற்குள் சுவரே சரிந்து விட்டது. காலில் பலமான அடி. சுவர் விழுந்து விட்டதால் சாக்கடைத் தண்ணீர் வீட்டுக்குள் வந்து விட்டது. சேறு மயம்—சகிக்க முடியவில்லை." தட்டுவீடு தர்மன், தன்வீடு இடிந்த சேதியைக் கூறி விட்டு, மார்வாடி கடையில் கடன்கேட்கிறான்

★

கந்தன், வேலன், தருமன், ரோஸ்பாய், என்றுபெயர்கள் இங்கு. டாம், டிக், ஹாரி, என்றுபெயர் மாறிஇருக்கும், மேனாடுகளில்—ஆனால் இதுபோன்ற காட்சிகள்—ஒருபுறம் செல்வத்தில் புரள்பவர், மற்றோர் புறம் வறுமையில் தத்தளிப்பவர்—எங்கும் உண்டு; சீமான்கள் நாடுஎன்று பேசப்படும் அமெரிக்காவிலுந்தான்!

இருவேறு வர்க்கங்கள் ஒவ்வோர் நாட்டிலும்— இல்லாதார் — உடைமையாளர் எனும் இரண்டுவகையினர் உண்டு; இந்த வர்க்கப் பேதமும், அதனால் ஏற்படும், தொல்லைகள், கொதிப்பு, கலவரம் ஆகியவைகளும், எங்கும் உண்டு; இன்றும் சரி, நெடுங்காலத்துக்கு முன்பும் சரி.

ஒரேஒருஇடத்திலே தான், இந்தப்பயங்கரமான பேதம் இல்லை! அந்த இடமே, சோவியத் ரஷியா!! வேறே, என்ன அத்தாட்சி வேண்டும், அந்நாடே நன்னாடு என்று கூற, புகழ, பாராட்ட, வாழ்த்த. இந்த நிலையை அந்நாடு அடைவதற்கு, அந்நாட்டு மக்கள் 1917 நவம்பர் 7ந்தேதி கொட்டிய இரத்தம், காட்டிய தீரம், உலகைப் பிரமிக்கச் செய்தது. அவர்களின் தியாகத்திலே தோன்றிய திருவிளக்கு, அந்தப்புதுஉலகு.

நவம்பர் புரட்சி என்ன சாதித்து விட்டது என்று கேட்பவர் இல்லை; கேட்பவர் இருப்பின், மார்தட்டிக் கூறலாம், ஒரு பெரிய தேசத்திலே, முன்னாள் வரையில் பாதிவாழ்வுவாழ்ந்திருந்த மக்களுக்கு முழுவாழ்வு, புதுவாழ்வு, நல்வாழ்வு, பெறத் தந்தது அந்தப்புரட்சி.

## பயங்கரப்பாதை

10-ம் பக்கத் தொடர்ச்சி

இன்றும், உரிமைக்காகப் போரிடப் பாட்டாளி கிளம்பினால் பயங்கரப்பாதை தான்—அதிலே மாற்றம் இல்லை—தூக்குமேடைக்குப் பதில்சுழல் துப்பாக்கி வந்தது—மாறுதல் இந்த வகையில் தான்!

இப்படி, விடுதலைக்கு மார்க்கம், பயங்கரமானதாக இருக்கும் என்பதைத் தெரிந்தும், ஒருமாவீரனின் சொல்லால் மன உரம் பெற்றமக்கள் நடத்திய மாபெரும் புரட்சியே, நவம்பர் புரட்சி. அந்தப் புரட்சி, வெற்றியையும் தந்தது—வெற்றி நிலைத்தும் விட்டது—வளர்ந்தும் வருகிறது—பயங்கரப் பாதையிலே போகவேண்டிய அவசியமின்றிப், பல்வேறு நாட்டுப் பாட்டாளி மக்கள் உரிமை பெறும் சூழ்நிலையைக் கூட, அந்தப்புரட்சி உண்டாக்கி வைத்திருக்கிறது.

# அந்த அன்னக்காவடி

ஆறு குழந்தைகள்! அன்புமனைவி! ஓயாத அலைச்சல்! நிரந்தரமான தொழிலோ, குடும்பத்துக்குப் போதுமான வருமானமோ கிடையாது. அலைந்து திரியும் ஒரு அன்னக்காவடி—அவனுக்கு அரைப்பட்டினி நன்றாகத்தெரியும் —கடன் வாங்கிவிட்டுக்கலங்குவது, கடனுக்காக அலைவது அவ்வளவும் பழக்கம். அவனுடைய, குடும்பத்தின் சுகத்தைமட்டும் கவனிக்க அவன் வேலை செய்திருந்தால், கஷ்டமே இருக்கக்காரணமில்லை. ஒப்பற்ற புத்திகூர்மை— இத்துடன் ஓயாத உழைப்பு—இவ்வளவில் பதினாயிரத்திலோர் பாகம், தன் குடும்பத்துக்காகப் பயன் படுத்தியிருந்தால், வாழ்க்கை நிம்மதியாக இருக்கும்; அவனும் "அன்னக் காவடி" என்று, சொர்ண மூலாம் பூசப்பட்டவர்களால் நையாண்டி செய்யப்பட்டிருக்கமாட்டான். அவன் வாழ்ந்திருக்கமுடியும், நிம்மதியாக, ஏதாவதோர் அனுவலகத்திலே—அன்புமனைவி மகிழ, குழந்தைகள் சந்தோஷமாக இருக்க. மூடர்கள்கூட வாழ்ந்தனர் —அவன் பார்த்துக்கொண்டு தான் இருந்தான். பேதைகள், மேதைகளை விலைக்கு வாங்குவதைப் பார்த்தான். பிழைக்க மார்க்கமற்றவன் என்ற இழிசொல் தன்னைப்பற்றிக்கூறப்படுவதையும் அறிவான். அவன் சாமான்யனுமல்ல-எத்தனையோ அலுவலகத்துக்குப் போதுமான 'நுழைவுச்சீட்டும்' இருந்தது அவனிடம். பல்கலைக்கழகத்தில் பயின்று, தத்துவ சாஸ்திரத்தில் டாக்டர் பட்டமும் பெற்றிருந்தான். இருந்தாலும், நிம்மதியான வாழ்வு இல்லை. நிரந்தரமான தொழில் தேடிக்கொள்ளவில்லை — அந்த அறிவாளி அன்னக்காவடியாகவே அலைந்து வந்தான். ஏன்?



ஆறுகுழந்தைகள்கொண்ட குடும்பத்துக்காவனமட்டும் செய்யும் நோக்கம் கொண்டிருந்தால், அவன், அவை நேரிட்டிராது—உலகிலே உள்ள ஏழைகளை எல்லாம் தன் குடும்பம் என்று எண்ணினான். அவ்வளவு குடும்பங்களிலும் 'வாழ்வு' மலரச்செய்யவேண்டுமென்று கருதினான்—ஆகவேதான், அந்த மகத்தான பொறுப்புணர்ச்சி, அவனை அன்னக்காவடியாக்கிற்று.

ஆனால் எப்படிப்பட்ட அன்னக்காவடி! சொர்ணமாளிகைகளிலே காணப்பட்ட நாகரிக வர்ணஜாலங்களை எல்லாம், வெட்ட வெளிச்சமாக்கி, உலக ஏழைகளுக்கெல்லாம், வாழ வழி வகுத்துக் கொடுத்த அன்னக்காவடி! எந்த நாடும் போற்றிப் புகழும், பொன்னேடாம் 'காபிடல்' (முதல்) எனும் புத்தகத்தைத்தந்து, அதன் மூலம் புதுஉலகம் பிறக்க வழி செய்துதந்தான்.

ஆம்! அவன் அன்னக்காவடியாகத் தன்னை ஆக்கிக்கொண்டான், அவனியில் அன்னக்காவடிகளாக யாரும் இருக்கக்கூடாது என்ற இலட்சியத்தைப் புகுத்துவதற்காக. தான் மருந்துண்டு, குழந்தையின் நோய் தீர்க்கும் தாயின் தன்மை போல!

ஏழையின் கஷ்டத்தைப்பற்றி, பொருளாதாரகஷ்டத்தைப்பற்றி. இரண்டு வார்த்தை, தெரிந்தோ தெரியாமலோ கூறிப்பாருங்கள், உடனே, அக்கருத்து பிடிக்காதவர், 'ஓ! இவர் பெரிய காரல் மார்க்ஸ்!' என்று வெடுக்கெனப் பேசுவார். காரல்மார்க்ஸ்— ஆம் —அந்த அன்னக்காவடியின்பெயர்தான் காரல்மார்க்ஸ்! "காபிடல்" எனும் புத்தகத்தின் கர்த்தா—புதுப்பாதைக்குத் திசைக்கருவி தந்தவர்—

32-ம் பக்கம் பார்க்க

## அன்னக்காவடி

31-ம் பக்கத் தொடர்ச்சி

அவருடைய வாழ்க்கைதான், அலைச்சல் நிறம்பியதாக இருந்தது.

ஆறு குழந்தைகளில் மூன்று இறந்து போயின—பாரம் ஓரளவு குறைந்தது என்ற நிலை.

பத்திரிகை வெளியிட வேண்டும் பாரிக்கு விடுதலை வாங்கித்தர; துண்டு வெளியீடுகள் அச்சிடவேண்டும், அவ்வப்போது பற்பல துரைத்தனத்தார்கள் கொள்ளும் போக்கைக்கண்டிக்க—பிரயாணச் செலவக்குப்பணம் வேண்டும்—பெட்டி இல்லை பேழை இல்லை—பெரியவர்கள் சம்பாதித்து வைத்த சொத்து இல்லை—சும்மா இருக்கவோ, முடியவில்லை. இலட்சியம், குத்துகிறது, குடைகிறது—வேலை செய்! வேலை செய்! வீழ்ச்சியுற்ற மக்கள் அடியோடு மாய்ந்திடாமுன்பு வேலை செய் என்று தூண்டுகிறது. இங்கிலையில் காரல் மார்க்ஸ், பலதடவைகளில் தத்தளித்தார். ஒரு சமயம், ஒருபொது உடைமை வழக்குசம்பந்தமாகத்துண்டு வெளியீடு அச்சடிக்க வேண்டி இருந்தது—பணம் வேண்டும்—என்ன செய்வார்! மழைக்காலத்து உபயோகத்துக்காக உள்ள மேல் சட்டை ஒன்று இருந்தது—அடகுவைத்தார் அதை-துண்டு வெளியிட்டுச் செலவுக்காக.

மனதை உருக்கும் மற்றோர் சம்பவம்—அவருடைய குழந்தை ஒன்று இறந்துவிட்டது—பிணத்தைப் புதைக்கவேண்டும்—செலவுக்குப் பணம் இல்லை. இரண்டு பவுன் கடன் வாங்கினாராம்!!

பத்திரிகைக்குத் தரும் கட்டுரைகளுக்குக்கொஞ்சம் பணம் கிடைக்கும் — அதுதான் குடும்பத்துக்கு, உயிர் ஊசலாடும் அளவுக்காவது உதவி செய்தது. வேறு வழி யில்லை. ஆனால் அவருடைய சிந்தனையோ, வழியற்றவர், வகையற்றவர், வறுமையுற்றவர் என்று உலகிலே உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு "நல்வாழ்வு" கிடைக்கவேண்டும், அதற்காகச் செய்யவேண்டியது என்ன என்பதுபற்றியே இருந்தது.

அன்றைய அடுப்பறைக்குப் பொருள் இராது—அவரோ அரசாங்கங்களின்செல்வ வளர்ச்சி, வியாபாரத்தினால் வரும் செல்வம், இவ்வளவும்,உழைப்பின் மூலம் கிடைக்கும் செல்வத்திலே, உழைத்தவனுக்கு ஒரு துளி கொடுத்துவிட்டு, எத்தர்கள் தமதாக்கிக்கொண்டதேயாகும்— உலகிலேஉள்ள முக்கிய செல்வம்—மூலாதாரமான செல்வம்—உழைப்புதான்—அந்த உழைப்பைச் சிலர் உறிஞ்சுகிறார்கள் அவர்கள்கொழுக்கிறார்கள்—பலர் உழைக்கிறார்கள்,எனவே உருமாறுகிறார்கள், என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

எந்தப்பருவத்திலே, உடற்கட்டு வளரத் தக்கவாழ்க்கைச்சுகம் தேவையோ, அந்தப் பருவத்திலே, எட்டுஆண்டுகாலம், அவரை வறுமைகொட்டிற்று.தாங்கிக்கொண்டார். ஆனால் உடல் நலம் தகர்ந்துவிட்டது. நாற்பதாம் வயதிலே காரல் மார்க்ஸ் கிழவராகிவிட்டார்—உடலிலே கட்டு கிடையாது—பட்டினி-உழைப்பு-பணம் இல்லாததால் மிக மலிவான புகையிலை வாங்கிப்புகைப் பிடித்ததால் நோய். அவர் தேய்ந்துபோனார்.

வறுமையின் வேதனையைத் தாங்கித் தகர்ந்துபோன காரல்மார்க்சுக்கு, அவருடைய நண்பன், செல்வக் குமாரன் என்ஜல்ஸ், உதவிசெய்தான்-வாழ்க்கைக்கு நிம்மதி தரும் பணஉதவி தந்தான். ஆனால், எட்டாண்டுகள் பட்ட கஷ்டத்தால்,உடல் நலம்பட்டுப்போனது,துளிர்த்துத்தழைக்க முடியவில்லை.

"காபிடல்" புத்தகம், அவருடைய சக்தி அவ்வளவையும் சூறையாடிவிட்டது.

அந்த அன்னக்காவடியின் அளவிடற்கரிய அறிவின் விளைவாக வெளிவந்த "காபிடல்" புத்தகத்தின் கருத்துதான், ஐரோப்பாவிலே, பல்வேறு புரட்சிகளுக்கு மூலசக்தி கொடுத்தது. 'காபிடல்' காட்டிய கருத்தை, மக்கள் மனதிலே தூவித்தான், லெனின், ரஷியப்புரட்சியை நடத்த முடிந்தது. இன்றும் முதலாளித்வ அரசுகள் அவ்வளவும், அந்த அன்னக்காவடியின் அற்புதமான ஏட்டை, ஆபத்தான கருவி என்றேதான் கருதுகின்றன.

---

# புதுவாழ்வு

"பிஸ்கட்டும் தின்னமாட்டேன் என்கிறான். சாக்லெட் கொடுத்தாலும் சாப்பிடவில்லை. பாதமப்பருப்பும் வேண்டாமாம், பாலோ, காப்பியோ, ஓவல்ட்டினோ கொடுக்கப்போனால், அழுதபடி இருக்கிறது. குழந்தை துரும்பாக இளைக்கிறான். என்ன செய்வதென்று தெரியவில்லை!" என்று காந்தா தன்குழந்தைக்கு பசியில்லாததைப் பற்றி வேலைக்கார வேலம்மாளிடம் கூறி டாக்டரைப்போய் மருந்துதரும்படி கேட்கச் சொல்கிறாள்.

குழந்தை காவுகாவென்று கத்துகிறது, காலை முதல் கண்றாவியாக இருக்கிறது. காது கொடுத்துக் கேட்கமுடியவில்லை. கஞ்சியோ தண்ணியோ கொடுத்தால் அழுகை அடங்கும். இங்கே என்னஇருக்கிறது? எதைக் கொடுப்பது? பால்இல்லை. பக்கத்து வீட்டிலே அண்டைவீட்டிலே போய் பல்லைக்காட்டிக் கெஞ்சினாலும் ஏதும் கொடுப்பாரில்லை. இந்தப்பாழாய்ப் போன குழந்தையும் ஓயறதில்லை. நான் என்னதான் செய்வேன். ஆண்டவனே! இப்படியும் சோதனை செய்வதா" என்று கைவண்டி இழுக்கும் கந்தன் மனைவி கருப்பி கவலையுடன் குழந்தையை அடித்துவிட்டுக் கூறுகிறாள்.

* * *

"இரண்டே நிமிஷம் பிரதர்! ஒரு அடி அடித்தது. ஆயிரத்து நானூறு ரூபாய் கிடைத்தது. அந்த "ஷேர்" வாங்கியது 1600-க்கு. இன்று காலை 8-மணிக்கு ஒரு 'பம்பாய் குருவி' ஒரு இரகசியம் சொல்லிற்று, ஷேர் விலை 9-மணிக்குமேலே விழுந்துவிடும் என்று. மனம் பதறிவிட்டது. சுற்றும் முற்றும் பார்த்தேன். அந்த சோணாசலசெட்டியைக் கண்டேன். ஷேர் மார்க்கட் "டல்" என்றான். சுத்தப் பிசகு என்றேன். மளமள வென்று பேசினேன். செட்டி சாய்ந்தான். நம்ம "ஷேர்" மீது அவனுக்குச் சபலம் தட்டிற்று. 3000 ரூபாய்க்கு முடித்தேன். ஷேர் அவரிடம் போச்சு. செக்நம்மிடம் வந்தது, செட்டி பாடு சாயந்திரம் தெரியும்! 1000 ரூபாய் கூடப் பெறாது." என்று ஷேர்மார்க்கட் வியாபாரி சிதம்பரம் தன்நண்பனிடம், தனது சமர்த்துபற்றிப் பேசினான்.

"ஆறு மணிக்குத் தான் போனேன். ஆப்பந்தின்று தண்ணி குடிச்சேனே அது தான். பகல் பன்னிரண்டு மணிவரைக்கும் பாடுபட்டேன். வள்ளி கொண்டுவந்த சோத்தெ இரண்டுவாய் அள்ளித்தின்னேன். கொஞ்சம் படுத்தேன். மேஸ்திரியின் குரல் கேட்டதும், எழுந்தேன், சாயந்திரம் ஆறுமணிவரை வேலை செய்தேன், இந்த 4-அணாதான் கொடுத்தான் அதலே ஒரு அணா ஈயம் என்று இப்போத் தான் தெரிஞ்சுது. நான்என்ன செய்யட்டும்" என்று கூலி குமரப்பன், கோபிக்கும் மனைவிக்குக் கூறி சாந்தப்படுத்தினான்.

* * *

"ரொம்ப ஜாலி! ரொப்ப குஷி! காக்டெயில் பார்ட்டி ரொம்பஜோர்! விஸ்க்கியும் பிராண்டியும், ஒயினும் ஜின்னும், மற்றதுகளும் சேர்த்து உள்ளுக்குப் போட்டதும், எனக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. காக்டெயில் சாப்பிட்டு பழக்கந்தான். என்றாலும், நேற்று கொஞ்சம் அதிகம். காரை எடுத்துக்கொண்டு கிளம்பினேன். ரோடு ஏதோ வளைந்து வளைந்து போகிற மாதிரி இருந்தது. டிரைவர், தான் ஓட்டுவதாகச் சொன்னான். 'டாமிட்' என்றேன். எதிரில் ஒருகார்வந்தது மோதிக்கொள்ளவே இருந்தது. டிரைவர் சடன்பிரேக் போட்டு நிறுத்தினான். எதிரே வந்தகாரும் நின்றது. டி. எஸ். பி, துரைசாமி இறங்கி வந்தார். என் கண்டிஷனைப் பார்த்து சிரித்துவிட்டு என்னை அவரோடு அழைத்துக் கொண்டுபோய் விட்டார் நமது மோடாரை, டிரைவர் வீட்டுக்கு ஓட்டிச் சென்றான். டி. எஸ். பி. வீட்டிலேயும் ஒரே அமக்களம் செய்தேன். விடியற் காலைதான் சரிப்பட்டது. டி. எஸ். பி.

34-ம் பக்கம் பார்க்க

## புது வாழ்வு

33-ம் பக்கத் தொடர்ச்சி

யிடம் எக்ஸ் கூய்ஸ் கேட்டுக்கொண்டேன். இது சகஜம் பிரதர், ஆனால் அந்த மாதிரி நேரத்திலே "டிரைவ்" செய்யக்கூடாது. அந்தப் பயலை ஓட்டச்சொல்லிவிட்டு, நீங்கள் நிம்மதியாகத் தூங்கிவிட்டிருந்தால் தொந்தரவே இராதே என்றார் டி எஸ் பி. இனிமேல் அப்படித்தான் செய்யவேண்டும்" என்று, முன்னாள் இரவுகுடிவெறியில் ஆடிய செய்தியை மறுநாள் காலை, மைனர் மிராசு மார்த்தாண்டம், அவருடைய நண்பர் நாராயணசாமியிடம் கூறினார்.

"என்னாபோ ஏகாத்தா! இப்பத்தான் தெரியுது. அந்தப்போலீசுகாரு பலமாத்தான் அடிச்சுப் பூட்டாங்க. ரொம்ப கூட குடிக்கல்லே. வழக்கமா சாப்பிட்ட மாதிரிதான் சாப்ட்டேன். நேத்து கள்ளுக் கடையிலே புது குமஸ்த்தா. அவன் தண்ணி கிண்ணி அதிகம் சேக்கலே, கொஞ்சம் காட்டா இருந்தது. வெளியே வந்தேன். என் மச்சான் வந்தான். அவனும் குடிக்க இருந்தான். சும்மா பேசினோம், சண்டை வந்திடிச்சி, அடிச்சான் நானும் அடிச்சேன். அவன் கூவ, நான் கூவ, கூட்டம் சேந்துபோச்சு. போலீஸ் வந்தது. அவன் டிமிக்கி கொடுத்திட்டான். என்னைப் புடிச்சி போலீஸ் லாக்கப்பிலே போட்டு அடைச்சிபுட்டாங்க. அடியும் பலமாகத்தான் கொடுத்துட்டானுங்க. இண்ணிக்கி வேலைக்குக் கூட போவமுடியாது. உடம்பெல்லாம்வலிக்குது. நெசமா சொல்றேன் கேளு, இனிமேல் நான் குடிக்கவே போறதில்லே. மாரியம்மா ஆணையா சொல்றேன்" என்று விறகு வெட்டும் வீரப்பன், தன் மனைவியிடம் கூறினான்.

8-ம் பக்கம் பார்க்க

## ஜெர்மன் ஜெமீன்தார்முறை

ஜெர்மனியில், ஏராளமான நிலத்தைத் தம் பிடியில் வைத்துக்கொண்டு அமுல் நடத்தும் ஜெமீன்தார்கள் (ஜூங்கர்ஸ் என்பது அவர்கள்பெயர்) உண்டு. ஏழை ஜெர்மானியர்களுக்குச் சொந்த நிலம் கிடையாது இந்தச் சிற்றரசர்களிடம், ஜெமீன்கள் இருக்கும் காரணத்தால்.

ஜெர்மனியில், ரஷியாவிடம் விடப்பட்டு, சோவியத் மேற்பார்வையில் உள்ள வட்டாரத்திலே, இந்த ஜூங்கர்களின் கொட்டம் அடக்கப்பட்டுவருகிறது. ஜெமீன் நிலங்களை, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பங்கிட்டுத் தருகிறதுசோவியத் ஆட்சி. ஒரு குறிப்பிட்ட பணம், தரவேண்டும் அந்த விவசாயி—உடனடியாக அல்ல, பத்துவருஷத்தவணையில்.

தலைமுறை தலைமுறையாக நிலமின்றி, கூலிக்கு உழுதுகொண்டுவந்த விவசாயிக்கு இன்று சொந்தநிலம்கிடைத்திருக்கிறது—பண்ணை அடிமை என்ற இழிநிலை ஒழிந்தது.

சோவியத் ஆட்சி ஏற்பட்டதால் நீ கண்ட சுகம் என்ன என்று, ஜெர்மானியனைக்கேட்டால், அவன் முகமலர்ச்சியுடன் தனக்கென்று உள்ளநிலத்தையும், அங்கு மேய்ந்துக்கொண்டிருக்கும் ஆடு கோழியையும் காட்டி, நான் மனிதனானேன்! என்று கூறமுடிகிறது. ஒரே அடியாகப் பொதுஉடைமைக்கொள்கையை அங்கு திட்டமாக்க முடியவில்லை என்றாலும் கூடுமான அளவு சமதர்ம மணம் கமழும்படிச் செய்யப்பட்டிருக்கிறது. ஜெர்மன் ஜெமீன்தாரி முறை ஒழிந்தது.

Edited Printed and Published by C N. Annadurai, M. A., at "DraVida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram.

## உயர்ந்தசுருட்டுகள்

**எம். எஸ். கம்பெனி**

110, ஆடிசன்பேட்டை காஞ்சிபுரம், S. I.

உயர்ந்த சுருட்டுகள், சேலம், குண்டூர், எல்லூர், பவானி, ஈரோடு, ராய்பூர் புகையிலையினால் தயாரிக்கப்பட்டது. காரம், குணம், மணம், வேக்காடு நிரம்பியது. எல்லாவிதமான புகையிலையும், சுருட்டுகளும் மொத்தமாயும் சில்லறையாயும், கிடைக்கும்.

M. S. & COMPany (REGd.)
'VENUS,' High class cigars & cheroots Manufacturers.
& Tobacco Dealers,
H. O. 110, Hodgsonpet Conjeeveram, S. I.

## மேன்மையான

## ஜவுளி தினுசுகளுக்கு

**சிறந்த இடம்**

முதல்தரமான பலரகபட்டுப்
புடவைகளுக்கும், மற்றும்
ஒவ்வொரு குடும்பத்திற்கும்
தேவையான ஆடைகளுக்கும்,
நாணயத்திற்கும்,
குறைந்தவிலைக்கும்
பெயர் பெற்ற இடம் இதுவே.

**முருகன் அண் கோ,**

Prop., (M. பாலசுந்தர முதலியார்,)
360, ஆடிசன்பேட்டை, காஞ்சிபுரம்.

## காஞ்சி பட்டுச்சேலைகள்

சொந்தத்தறியில் உயர்ந்த நவீனரகமான காஞ்சிபுரம்
பட்டுசேலை உற்பத்தியாளர்கள்:-
R. ஸ்ரீனிவாசன் & சன்ஸ்,
73 B. சங்கூசாபேட்டை, காஞ்சிபுரம்.

R. SRINIVASAN & SONS
wholesale Silk & Lace Cloth Merchants.
No, 73-B, Sangusapet Conjeevaram.

"நானோர் பொல்லாக்
கொடுங்கோலன்!

நாட்டிலெனைப் போல்வார்
இல்லை.

நானிலம் கண்டு நகைத்
திடவும்

நல்லோர் நின்று உமிழ்ந்
திடவும்

காட்டுகிறார் என்னைக்
கல்லுருவில்

கடைசிச் சின்னம்—
கண்டிடுவீர்!'



கடைசிச்சின்னம்

மூன்றாம் அலெக்சாண்டர், ருஷிய ஜார்! இவனுடைய சிலை ஒன்றுமட்டுமே, சோவியத்தில் இன்று மிச்சம்—மற்றஜார்கள், கொடுங்கோலர்களின் சின்னங்கள் சிலைகள் யாவும் அழிக்கப்பட்டு ஒழிந்தன. கடைசிச்சின்னமாக, இக்கல்லுருவம் மட்டும் நிற்கிறது. ஏன்? அந்தக்காரணத்தையே, சிலைக்கு அடியில் பொறித்திருக்கின்றனர் சோவியத்மக்கள்.

இதோ ஓர்கொடுங்கோலன்! இப்படிப் பட்டவர்களிடம் சிக்கி நாங்கள் இம்சைப் பட்டோம்—புரட்சி செய்தோம்—வென்றோம்—கொடுங்கோலர்களை வீழ்த்தினோம்—கொடியர்களின் கல்லுருவங்களைப் பொடிப் பொடியாக்கினோம். நானிலம் கண்டு நகைத்திடவும், நல்லோர்கண்டு காறி உமிழ்ந்திடவும், இந்தக் கல்லுருவை மட்டும் விட்டு வைத்திருக்கிறோம் என்று கூறுகிறது சோவியத்.

இதை, அந்த ஜாரே கூறுவதுபோன்ற பாவனையில் சிலையில் பொறித்துள்ளனர்.

"ஒவ்வொருவனையும் தன் உழைப்பின் பலனை அனுபவிக்கவிடுவதே நியாயம். நாங்கள் [illegible] தனியுடைமையைத் தொலைத் [illegible]

நாடோடி
17ம்-பக்கத் தொடர்ச்சி

குப்பிசாசாக அலைகிறான்' என்று எண்ணிக் கொண்டே படுத்தார் — எம்பெருமான்பிள்ளையைப்பற்றி. எம்பெருமான், 'சம்பந்தம் சுற்றுவதற்குச்சளைப்பதில்லை. பணம்எங்குகிடைக்குமோ என்று மோப்பம்பிடித்துக்கொண்டு அலைகிறான்'' என்று சம்பந்தத்தை மனதிற்குள் திட்டிக் கொண்டே, படுத்தான். வியாபாரிகளை ஏற்றிக் கொண்டு இரண்டு இரயில்களும், கம்பீரமாகச் சென்றன. சிதம்பரம் சந்திரா டாக்கீசில், டீ கடையில், மருத்தாச்சலம், அரைத்தூக்கத்தோடு உட்கார்ந்துகொண்டிருந்தான். உள்ளே 'மாயஉலகு' என்ற தமிழ்ப்படக்காட்சி நடந்து கொண்டிருந்தது.

"நமது பாட்டாளிகள் நடத்திய புரட்சிதான், அரசியல் மட்டுமல்ல, பொருளியல் விஷயத்திலும், வெற்றிகள் கிடைத்தன என்பதை உலகுக்குக்காட்டும் புரட்சியாகும். நமது புரட்சி ஒன்றுதான், முதலாளித்துவத்தின் தளைகளை உடைத்தெறிந்து, மக்களுக்குவிடுதலைவாங்கித்தந்ததோடன்றி, மக்களின் வாழ்க்கைவளமாவதற்குவேண்டிய வழிவகைகளை வெற்றிகரமாகச் செய்து தந்த புரட்சியாகும். நமது புரட்சிகளின் சக்தி இந்தச் சூட்சமத்திலேதான் இருக்கிறது—நமது புரட்சி அழியாததுஎன்பதற்குக் காரணமும் இதுதான்."

ஸ்டாலின்,

# லெனின்

## வாழ்க்கைச் சித்திரம்



வீரமுழக்கம்





கைது செய்கின்றனர்



விரோதியின் தாக்குதல்



குதூகல வாழ்வு



ஓயாத உழைப்பு

*Use and enjoy!*

# Parrot Brand Snuff




## A. S. Rajan, & Co.,

Quality Snuff Manufacturers,

P. B. No. 1155, Madras 21


Wrapper only printed at Sri Lakshmi Press, Conjeeveram. Q. H. C T 16 880/46 C 14,000.